
வார இதழ்
# தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM දේසියම්

மலர்: 01 | இதழ்: 10 | வள்ளுவர் ஆண்டு 2054 | 27.10.2023 - 01.11.2023 | பக்கங்கள்: 16 | ஊக்குவிப்பு: 80/=

WELLA HAIR DRESSING
WELLA
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

# சிங்கள வனவாசிகள் யாழ் வருகை ஏன்?



## எழும் கேள்விகளும் சந்தேகமும்

மஹியங்கனையில் வசித்துவரும் ஆதிவாசிகள் முதல் தடவையாக யாழ்ப்பாணத்திற்கு கடந்த சனிக்கிழமை (22) விஜயம் செய்திருந்தனர்.இவர்களுடைய இந்த விஜயம் பல்வேறு சந்தேகங்களை எழுப்பியிருக்கிறது.

ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னில அத்தோ தலைமையிலான சுமார் 100க்கு மேற்பட்ட ஆதிவாசிகள் குழுவினர் யாழிற்கு விஜயம் செய்து, யாழின் முக்கிய

பக்கம் 09







# சம்பந்தன் ஐயா வீட்டுக்கு போங்களேன்!



பக்கம் 10

## பொறுப்புக்கூறல் விடயத்தை குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லுங்கள்



மீண்டும் வலியுறுத்திய கஜன்

பக்கம் 15

## தமிழர்களை வெட்டுவேன் பௌத்த தேரர் கூச்சல்



பக்கம் 15

## வடக்கின் மீன் பிடித்துறையில் கைவைக்கும் சீனா மீனவர்களை இலக்கு வைக்கும் டக்கி

பக்கம் 15


ROLEX HOTEL
340, Hospital Road, Jaffna.
Tel: 021 222 2808
360, Galle Road, Wellawatte, Colombo 06
Tel: 011 236 0462
rolex.hotel@yahoo.com
ROLEX HOTEL


தமிழ் பேசும் மக்களின் தேசியப் பத்திரிகை!



# மூடர்களின் தேசம்

செல்வி வினாயகமூர்த்தி

இலங்கைதீவில் உள்நாட்டு யுத்தம் மௌனிக்கப்பட்டு 14ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் இலங்கைக்குள் இனங்களுக்கிடையே ஐக்கியத்தை கட்டியெழுப்ப வேண்டிய வேளையில் ஓர் தசாப்தங்களாக இனமுரண்பாடுகளைக் கூர்மைப்படுத்தும் வகையில் இனவாத மதவாத வன்மங்களை கக்குவதிலும் தமிழர்தேசிய பரப்பினுள் நிலப் பறிப்பு மற்றும் சிங்களபௌத்த மயமாக்கல் நடவடிக்கைகளை திட்டமிட்டு மேற்கொள்வதிலும் இலங்கை ஒரு பௌத்த தேரவாதத்தை போற்றுகின்ற சிங்கள நாடு என்கின்ற வகையில் பல்வேறுபட்ட தந்திரோபாய முனைப்

> **பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் போராட்டங்களுக்குச் செவிசாய்க்கவும் தவறியுள்ள ஆட்சியாளர்கள், மறுபுறத்தில் குறிப்பாக தமிழ் தேசியப்பரப்பில் அத்துமீறிய குடியேற்றங்களினூடாக வரலாற்று ரீதியிலான இயல்பான இனப்பரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான பின்கதவு நடவடிக்கைகளை மிகத் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றனர்**

புகளை பேரினவாத ஆட்சியாளர்களின் பக்க பலத்துடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறான முனைப்புகளுக்கு முன்னணியில் பௌத்த பிக்குகளே உள்ளார்கள் என்பது இலங்கையின் சுதந்திரத்துக்கு பின்னரான வரலாறாகும்.

கடந்த மாதம் தியாகி திலீபனையும் முல்லைத்தீவு நீதிபதியையும் வைத்து ஒத்திகை பார்த்த பேரினவாதம் கடந்த கிழமை மயிலத்த மடு மேச்சல் தரை விவாகரம் தொடர்பில் மட்டக்களப்பில் பௌத்த பிக்கு ஒருவரை வைத்து ஒத்திகை

பார்க்கிறது. இவ்வாறாக தமிழ் மக்களின் கவனமும் ஊடகங்களின் கவனமும் புதிய விடயங்களின் மீது குவிக்கப்படுகின்றது.ஆனால் அவை வெவ்வேறு விடயங்கள் அல்ல.ஒரே ஒடுக்குமுறை கட்டமைப்பின் வெவ்வேறு வெளிப்பாடுகளேயாகும். அவற்றை அவற்றுக்கேயான ஒட்டுமொத்த வரைபடத்துக்குள் வைத்து தமிழ்மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.அதாவது ஒடுக்குமுறைக்கு ஒரு நீண்ட கால வழி வரைபடமும் மாறாத நிகழ்ச்சி நிரலும் ஒன்றிணைந்த செயல்பாடுகளுமே இங்கே கையாளப்பட்டு வருகின்றமை தெட்டத்தெளிவாகின்றது.

இலங்கை பல்லின சமூகங்கள் வாழும் நாடாக பெயரளவில் காணப்பட்டாலும் இது பௌத்த சிங்களவர்களின் நாடு என்பதிலும் ஏனைய இனங்களை பார்க்கிலும் சிங்களவர்களே சுதந்திரமாக வாழமுடியும் ஏனைய இனத்தவர்கள் வாழலாம் ஆனால் பெரும்பான்மை இனத்துக்கு அடிபணிந்தே வாழவேண்டும் என்பதில் சிங்களதேசம் சுதந்திரத்திற்கு பின்னிருந்து பெரும் முனைப்பு காட்டிவருவது கண்கூடு .

தமிழருக்கு ஒரு நீதி சிங்களவருக்கு ஒரு நீதி என்கின்ற அடிப்படையில் பார்க்கும் பேரினவாதம் தமிழர்களுக்கு எதை வழங்க வேண்டும் எதை வழங்கக்கூடாது என்பதை தீர்மானிக்கும் சக்தி பேரினவாத மக்களுக்கு பௌத்த துறவிகளுக்குமே உண்டு அன்றி ஆட்சியாளர்களின் கைகளில் எதுவுமில்லை .இதற்கு இலங்கை சுதந்திரம் அடைந்ததிலிருந்து தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இனவாத குரோத வன்முறைகளே சான்று.

இலங்கைத் தீவின் பூர்வீகக் குடிகளான தமிழர்கள் 2500 வருடங்களுக்கும் மேலான சரித்திரத்தைக் கொண்டுள்ளனர். இலங்கைதீவின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் மரபுவழித் தாயகப்பரப்புக்களாகும்.இங்கு பேரினவாதத்திற்கு சார்பாக எழுதப்பட்ட மகாவம்சத்திலோ அல்லது இலங்கைத் தமிழரின் சரித்திரத்தை விபரிக்கும் எந்த ஒரு வரலாற்று நூல்களிலோ வடக்கையோ அல்லது கிழக்கிலோ அல்லது வன்னிப் பகுதியிலோ அல்லது யாழ்ப்பாணத் தமிழ் இராச்சியத்திலோ எந்த ஒரு சிங்கள அரசனும் ஆண்டதாக சரித்திரத்தில் குறிப்பிடப்படவில்லை.

இலங்கையின் பூர்வீக குடிகளான தமிழர்களது பாரம்பரிய நிலம் தமிழினப் படுகொலைகளின் ஊடாகத் தமிழ் மக்களை அச்சுறுத்தி பூர்வீகக் காணியில் இருந்து வெளியேற்றியதன் மூலமும் தமிழரிடம் இருந்து பறிக்கப்பட்டது. இதற்கு

தமிழினத்தின் மீது முதலாவது பாரிய இனப்படுகொலை இங்கினியாகலவில்1956 ஜுன்5 இல் கல்லோயா திட்டத்தின் ஊடாக பேரினவாதிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்டமையே முதலாவது சான்றாகும்.

1956 ஐத் தொடர்ந்து 1958 ல் அனுராத புரத்திலும் 1977 1978 1981 1983 என தமிழர் தாயகத்திலும் தென்னிலங்கையிலும் மலையகப் பகுதியிலும் காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட கலவரங்கள் தமிழர்களுக்கு உரிமையான நிலங்களையும் சொத்துக்களையும் அபகரிப்பதற்காக இன அழிப்பை நோக்காகக் கொண்டு இலங்கை படைகளின் உதவியுடன் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டது. எல்லைக் கிராமங்களிலும் சிங்களவர் மத்தியிலும் வாழ்ந்த தமிழர்கள் இக்கலவரங்களின் போது நடந்த படுகொலைகளைத் தொடர்ந்து வெளியேற்றப்பட்டதோடு பாதுகாப்பின்மை காரணமாக வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.இந்த இனவழிப்பில் சிங்கள மக்களுடன் பௌத்த துறவிகளும் இணைந்திருந்தனர் என்பது அன்றைய வரலாறு.

1983 ஆடிக்கலவரம் தென்னிலங்கையில் தமிழர்களின் இருப்பை கேள்விக்குள்ளாக்கியதுடன் பாதுகாப்பில்லாத சூழலை தமிழர்களிடத்தே உணர்த்தியிருந்தது.

அத்துடன் தனிச்சிங்கள சட்டம் வருவதற்கும் பண்டா- செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டதற்கும் காரணமானவர்களாக பேரினவாத மூடர்களும் பௌத்த துறவிகளுமே இருந்துள்ளனர்.

தமிழர்களின் மரபுவழித் தாயகக் கோட்பாட்டை சிதைத்து இலங்கைத் தீவானது கௌதம புத்தரால் சிங்களவர்களுக்கு அர்ப்பணிக்கபட்ட பூமி என்ற மகாவம்ச மாயாவாத சித்தாந்தத்தை நிலைநாட்டுவதற்காக இலங்கைத் தீவு முழுவதையும் சிங்களமயமாக்குதலை நோக்காகக் கொண்டு தமிழர் பாரம்பரிய நிலத்தில் அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்களை அன்றிலிருந்து இன்றுவரை மேற்கொண்டு வருகின்றனர்.

சுதந்திரத்துக்குப் பிந்தைய இலங்கையானது, 'ஜனநாயகம்' என்ற தோற்றப் பொலிவோடு இயங்கினாலும், நடைமுறையில் அவ்வாறு அமைந்து இருக்கவில்லை. ஜனநாயகத்தின் போர்வையுடன், சர்வாதிகாரத்தை நோக்கிய நகர்வுகள் மேற்கொள்ளப்பட்ட வேளைகளில், மக்கள் தங்கள் வாக்குரிமை மூலம், சர்வாதிகாரச் சக்திக்குள் இலங்கை மூழ்காமல் பார்த்துக் கொண்டனர்.

மூன்றாம் உலக நாடுகளில், இலங்கை ஒரு வித்தியாசமான முன்மாதிரி. இனத்துவ மேலாண்மையானது, பன்மைத்துவத்தைத் தவிர்ப்பதற்கு சர்வாதிகாரமாக இருக்க வேண்டிய அவசியமில்லை. இலங்கையில் நீண்டகாலமாக இருந்து வரும் சிங்கள - பௌத்த மேலாதிக்கமும் சிறுபான்மையினரின் அடக்குமுறையும் கீழ்படிதலும் இவ்விடயத்தை நிரூபித்து காட்டுகின்றன.


இலங்கை தீவில் வரலாறு முழுவதும், எல்லா மதங்களும் அரசியல் நோக்கங்களுக்காகக் கையாளப்பட்டுள்ளன, பௌத்தமும் அவ்வாறே! இலங்கையில் உள்ள பௌத்த சமானியர்களும் மதகுருமார்களும், அரசியல் பௌத்தத்தை பரப்புவதன் மூலம், பரஸ்பர நன்மைக்காக ஒருவரையொருவர் பயன்படுத்திக் கொண்டதையே அவதானிக்க முடியும்.

பேரின அரசியல்வாதிகளும், பேரின அரசியல் கட்சிகளும் தங்களுக்குள் தீவிரமான அரசியல் முரண்பாடுகளைக் கொண்டிருக்கலாம். ஆனால் தமிழ் மக்களின் நலன்களில் அவர்கள் ஒருமித்த நிலைப்பாட்டையே கொண்டிருக்கின்றார்கள். ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக அவர்கள் அரசியல் ரீதியாக கடுமையாக மோதிக்கொள்வார்கள். ஆனால் சிறுபான்மை இன மக்களைப் பொருத்தமட்டில், அவர்கள் சிங்கள பௌத்த தேசிய கொள்கையில் இறுக்கமாக ஒன்றிணைந்து கொள்வார்கள். இதுதான் இலங்கையின் அரசியல் யதார்த்தமாகும்.



மிகுதி 09 ஆம் பக்கத்தில்...

தேசியம்
THESIYAM
ஆசிரியர் பீடம்
தொலைபேசி: +94 76 567 3339
மின்னஞ்சல்: thesiyamnews@gmail.com
இணையம்: www.thesiyamnews.com



### காஸாவில் ஒரு முள்ளிவாய்க்கால்

# சர்வதேசத்தை இனியும் நம்பியிருக்க வேண்டுமா?

**முள்ளிவாய்க்கால்** அவலத்தை நினைவுபடுத்தும் நிகழ்வொன்று இன்று காஸாவில் நடைபெறுவதை உலகம் பார்த்துக் கொண்டிருக்கிறது. மனிதாபிமானம் மரணித்துக் கொண்டிருக்கும் ஒரு காலத்தில் நாங்கள் வாழ்கின்றோம் என்பதற்கு முள்ளிவாய்க்காலும் காஸாவும் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். பார்க்குமிடமெங்கும் மனித எச்சங்கள், கேட்கும் சத்தங்கள் எல்லாம் மரண ஓலங்கள் என்று காஸா ஒரு மயான பூமியாக காட்சியளிக்கிறது.இந்த காட்சிகள் ஈழத்தமிழருக்கு புதியதொன்றல்ல.2009 ஆம் ஆண்டு சர்வதேச சக்திகளின் பலமான இராணுவ தளவாடங்களை கொண்டு இலங்கை இராணுவம் முள்ளிவாய்க்காலில் நடத்திய மனிதாபிமானமற்ற இனப்படுகொலையை இன்று காஸாவில் காண முடிகிறது. இந்நிலையில் காசாவில் உள்ள அனைத்து பாலஸ்தீனியர்களும் இருபத்திநான்கு மணி நேரத்திற்குள் வடக்கு காசாவை விட்டு வெளியேற வேண்டும் என்று இஸ்ரேல் உத்தரவிட்டுள்ளது. இத்தகைய ஒரு நிகழ்வை யாழ் மக்களும் 1995-ம் ஆண்டு அக்டோபர் 30 ஆம் திகதி சந்தித்திருந்ததை எவரும் மறந்திருக்க மாட்டார்கள்.

365 சதுர கிலோமீட்டர் பரப்பு கொண்ட காஸாவில் சுமார் 20 லட்சம் பாலஸ்தீனர்கள் வசிக்கிறார்கள்.உலகிலேயே மக்கள் மிகுந்த நெரிசலாக வாழும் மூன்றாவது பிரதேசம் காஸாவாகும்.அதாவது காஸாவை 20 இலட்சம் மக்கள் வாழும் ஒரு சிறைச்சாலை என அரசியல் வல்லுநர்கள் வர்ணிக்கும் அளவுக்கு அந்த மக்கள் 21 ஆம் நூற்றாண்டிலும் சிறைக்கைதிகளாகவும்-சுதந்திர காற்றை சுவாசிக்கமுடியாதவர்களாகவும் அடிமைகளாகவும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதாவது மனிதாபிமானம் மரணித்த உலகில் இஸ்ரேலின் போர்க் குற்றம் தொடர்கிறது.உலகின் மனசாட்சி மௌனித்திருக்க, ஐ.நா.வும் தோல்வியைடைந்திருக்கிறது. பாலஸ்தீன மக்களின் துயர் என்பது இன்று-நேற்று ஆரம்பமானதொன்றல்ல.1940 களில் தொடங்கிய பாலஸ்தீன மக்களின் துயரம் இன்றளவும் தொடர்கிறது. இலங்கையில் எவ்வாறு ஈழத்தமிழரின் நிலங்கள் சிங்கள ஆட்சியாளர்களால் மெல்ல மெல்ல பறிக்கப்பட்டதோ அவ்வாறே பாலஸ்தீனம் யூதர்களால் ஆக்கிரமிக்கப்பட்டது.

முள்ளிவாய்க்காலிலும் தமிழர் தாயகத்திலும் எவ்வாறு ஆட்சியாளர்கள் அத்தியாவசிய உணவுப்பொருட்கள்,மற்றும் மருந்துப்பொருட்களுக்கு தடை விதித்து தமிழர்களை பழிவாங்கியதோ அதேபோன்றுதான் தற்போது உணவு, எரிபொருள் மற்றும் மருந்து பொருள்கள் எதுவும் உள்ளே செல்ல இயலாதவாறு இஸ்ரேல் முழுமையாக காஸாவை முற்றுகை செய்துள்ளது. மேற்படி போர் மேலும் சில நாட்களுக்கு தொடருமாக இருந்தால் காஸா என்ற தேசமும் அந்த தேசத்துக்காக போராடிய ஒரு இனமும் காணாமல்போன இருண்ட வரலாற்றை பார்க்கும் ஒரு நிலமைக்குள் இன்று வாழ்கின்ற ஒட்டுமொத்த மனித இனமும் தள்ளப்படும்.

மனிதாபிமானமற்ற வல்லரசுகளின் மனித வேட்டைக்குள் சிக்கி தவிக்கும் காஸா மக்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியிருக்கும் ஒரு நிலையில், வல்லரசுகளின் ஆட்டங்களுக்கு ஆடிக்கொண்டிருக்கும் மனித உரிமைகளை பாதுகாக்கும் நிறுவனங்கள் குறிப்பாக ஐ.நா.மனித உரிமைகள் பேரவை போன்ற அமைப்புகள் ஈழத்தமிழருக்கு கொடுமைகள் நடந்த வேளையில் அமைதி காத்ததை போன்று இன்றும் அதே அமைதியை காத்துவருகின்றன. ஆகவே இந்த மனித உரிமை அமைப்புகள் என்பன வல்லரசுகளின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப செயற்படும் நிறுவனங்கள் என்பதை ஈழத் தமிழர்களும் ஐ.நா.ஊடாக தீர்வு வரும் என்று தமிழரை ஏமாற்றி பிழைப்பு நடத்துவோரும் உணர்ந்துகொள்வது அவசியம்.நிச்சயமாக இவ்வாறான அமைப்புகளால் எந்த சமூகத்துக்கும் நீதி கிடைக்கப் போவதில்லை. எங்களுடைய உரிமைகளை நாங்கள் தான் போராடி பெற்றுக்கொள்ளமுடியும் என்பதற்கு இதனைவிட சிறந்த உதாரணம் இருக்கமுடியாது.ஆகவே ஈழத்தமிழர்கள் தங்களுடைய நில மீட்சிக்காகவும் ,கலை-கலாசார -பண்பாட்டு மீட்சிக்காகவும்,தாயக மீட்சிக்காகவும் அணி திரண்டு போராடுவதே காலத்தின் தேவை.அதனைவிடுத்து சர்வதேச அமைப்புகளையும் சர்வதேச நம்பிக்கொண்டிருப்பது காலத்தை வீணடிக்கும் செயலாகும் என்பதை கூறிவைக்கின்றோம்.

○

## தேசியப் பார்வை...

தேசியன்

# 'சிங்கள வனவாசிகளின் யாழ்., வருகை' சொல்லும் செய்தி என்ன??



கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டத்திற்குட்பட்ட மகியங்கனையிலிருந்து இலங்கைத் தீவின் வேடர் சமூகத்தை சேர்ந்த 70 இற்கும் மேற்பட்ட சிங்கள வனவாசிகள் யாழ்பாணத்துக்கான வருகையொன்றை அண்மையில் (21)மேற்கொண்டிருந்தனர்.

இலங்கைத் தீவில் நடைபெற்ற தமிழர்களின் உரிமை போராட்டத்திற்கான யுத்தம் மௌனிக்கப்பட்டு 14 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் வனவாசிகளின் நல்லிணக்க வருகை என்பதானது முதன் முதலாக வடக்கை நோக்கி திரும்பியுள்ளது என மகிழ்ச்சியுடன் ஒரு செய்தியாக கடந்து செல்ல முடியவில்லை.

இலங்கையின் மத விவகார மற்றும் மத நல்லிணக்க அமைச்சினால் வருடந்தோறும் 5 கோடி ரூபா இன மத கலாசாரத்தை வலுப்படுத்தும் நோக்கில் அரச துறை சார்ந்து ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இந்த நிதியில் மாவட்டங்களின் பிரதேச செயலகங்கள் ஊடாகத் தேர்வு செய்யப்படும் சிங்கள கிராமங்களில் இருந்து பௌத்த வரலாற்று சின்னங்களையும் விகாரைகளையும் சிங்கள மக்கள் பார்வையிடுவற்கு அரசால் ஒழுங்கு செய்யப்படுகின்றது.

இவ்வாறான சலுகைகளுக்கு துறை சார்ந்த அரச நீதி ஒதுக்கப்பட்டும் தமிழ் பிரதிநிகள் இவற்றை கண்டு கொள்ளாமலும் பயன்படுத்தாமல் இருப்பதும் வேதனை அது தவிர்த்து ஒரு நாட்டில் பெரும்பான்மை இனம் அரசால் வழங்கப்படுகின்ற இவ் விசேட சலுகைகளை அனுபவிக்கிற போது இன்னொரு இனம் இவ்வாறான சலுகைகளைப் பெற்றுக்கொள்ளாமலும் அனுபவிக்காமல் பார்த்துக்கொள்வதும் தமிழினத்தின் அரச உத்தியோகத்தர்களின் அதிமேதாவித்தனமோ, அறியாமையோ அல்லது நிகழ்ச்சி நிரலாகவோ இருக்கலாம்.

இவ்வாறான நிலையில் நல்லிணக்கத்தின் அடிப்படை என்ற அரச சலுகையின் அடிப்படையில் அண்மையில் சிங்கள வனவாசிகள் யாழ்பாணத்துக்கான வருகையொன்றை மேற்கொண்டிருந்தனர்.

மகிந்த, மைத்திரி, கோட்டாபய என எந்த அரசாங்கத்தின் ஆட்சியிலும் முனைப்பு காட்டாத வேடர் சமூக யாழ் வருகை என்பது ஜனாதிபதி ரணிலின் ஆட்சியில் இடம் பெற்றிருக்கின்றது என்றால் நாம் இவ்விடயத்தை சந்தேகத்தோடு தான் அனுக வேண்டும்.

ரணிலின் அரசியல் பேரினவாதத் தந்திரத்தை அவ்வளவு எளிதாக எடைபோட்டு நாம் கடந்து விட முடியாது . இலங்கைத்தீவில் பூர்வ குடிகளான தமிழர்கள் 2500ஆண்டுகள் சரித்திரத்தை கொண்டிருந்தாலும் பூர்வ குடிகள் தமிழரா? அல்லது சிங்களவரா? என்கின்ற சர்சைக்கு விடைகாண முடியாத இன்றைய நிலையில் எஞ்சியிருக்கும் தமிழர்களின் பூர்வீக தொன்மைகள் பேரினவாதிகளால் தொல்பொருள் திணைக்களத்தினால் என்கின்ற பெயரில் திரிபுபடுத்தப்பட்டு வரலாறு மடைமாற்றப்படும் நிலையில் இலங்கையின் பூர்வீக குடிகள் தமிழரல்ல வேடர் சமூகத்தைச் சார்ந்த சிங்கள ஆதிவாசிகள்தான் என வேடர் சமூகத்தின் வடக்கு வருகையின் மூலம் சர்வதேசத்திற்கு ஒரு செய்தி ரணில் தரப்பால் சொல்லப்பட்டிருக்கின்றது என்றே கருத முடியும்.

> **"வேடர் இனத்தின் தலைமுறையினரான சிங்களவர் இலங்கைதீவில் கேளிக்கைகள் களியாட்ட விடுதிகள் என நாகரீகத்தின் உச்சத்தை தொட்டு நிற்கும் போது வேர்களும் அதன் இரண்டாம் மூன்றாம் தலைமுறையினர் அரசாங்கம் அடிப்படை வசதிகளையும் சலுகைகளையும் வழங்கியிருந்தும் இன்னும் வனத்துக்குள் மூழ்கியிருப்பதென்பது பலத்த சந்தேகங்களை தோற்றுவிக்கிறது."**

இங்கு தொன்மை வரலாற்று சான்றுகளின் அடிப்படையில் பூர்வீக குடிகள் அல்லது ஆதிக்குடிகள் என்போர் ஆங்கிலப் பதத்தில் indigeneity people என்றே அழைக்கப்படுகின்றனர்

வேடுவர் இனம் அல்லது வனவாசிகள் என்பது ஆங்கிலத்யில் Forest Dwellers என்றே அழைக்கப்படுகிறனர். இப்பதங்களின்படி இலங்கை தீவின் பூர்வீக குடிகள் தமிழரா? அல்லது ஆதிவாசிகள் என அழைக்கப்படுகின்ற வேடுவர் இனமா ? என்பதில் பல்வேறுபட்ட முறைசாராத சர்சைகள் எழுகின்றன.

வேடர் இனத்தின் தலைமுறையினரான சிங்களவர் இலங்கைதீவில் கேளிக்கைகள் களியாட்ட விடுதிகள் என நாகரீகத்தின் உச்சத்தை தொட்டு நிற்கும் போது வேர்களும் அதன் இரண்டாம் மூன்றாம் தலைமுறையினர் அரசாங்கம் அடிப்படை வசதிகளையும் சலுகைகளையும் வழங்கியிருந்தும் இன்னும் வனத்துக்குள் மூழ்கியிருப்பதென்பது பலத்த சந்தேகங்களை தோற்றுவிக்கிறது.

14 வருடங்களின் பின்னரான வேடர் இனத்தின் யாழ் வருகை வெறும் செய்தியோ! அல்லது சுற்றுலாவோ? அல்ல மாறாக ஸ்ரீலங்கா அரசின் பௌவுத்த பேரினவாத திட்டமிடல் நகர்வின் பிரதிபலிப்பே! இதன் அடித்தளம் என்றே ஊகிக்க முடியும்

யாழ் தமிழ்ச் சமூகம் மத்தியில் எழுந்துள்ள ஆதிவாசிகளாக காட்சிப்படுத்தப்பட்ட வேடர் தொடர்பான பார்வைக்கும் சந்தேகத்திற்கும் அவர்களது விருகை தொடர்பாக யாழ் புத்திஜீவிகள் பேராசிரியர்கள் சமூக பற்றாளர்கள் பதிலளிதளிப்பார்களா?

○








# இஸ்ரேல் பலஸ்தீன் யுத்தம்

# தமிழர்கள் யார் பக்கம்?

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் வேக மெடுக்கத் தொடங்கியபோது 1970களின் இறுதியாண்டுகளிலும்,1980களின் முற்கூறிலும்,தமிழ் இயக்கங்களான ஈரோஸ்,ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட் போன்றன பாலஸ்தீனத்தில் படைதுறைப் பயிற்சிகளைப் பெற்றன. அவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் தாயகத்தில் பிஎல்ஓ ரெய்னிஸ் என்று அழைக்கப்பட்டார்கள்.அவர்களிற் பலர் அந்த இயக்கங்களில் முக்கிய பொறுப்புகளை வகித்திருக்கிறார்கள்.அவர்களிற் சிலர்-சுரேஷ் பிரேமச்சந்திரன்,டக்ளஸ் தேவானந்தா போன்றவர்கள் -இப்பொழுதும் தமிழ் அரசியலரங்கில் செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பக் காலகட்டங்களில் பலஸ்தீனம் தமிழ் மக்களின் நட்பு சக்தியாக இருந்தது. அந்நாட்களில் கவிஞர் நுகுமான் தொகுத்த பாலஸ்தீனக் கவிதைகள் என்ற தொகுப்பு தமிழ்ப் போராளிகளால் விரும்பி வாசிக்கப்பட்டது.அந்நூல் பல இளம் கவிஞர்கள் மீது செல்வாக்குச் செலுத்தியது.அக்கால கட்டத்தில் இஸ்ரேல் இலங்கை அரசாங்கத்திற்கு போர்த் தளபாடங்களை வழங்கியது. அது கெடுபிடிப் போர்க் காலகட்டம்.

1992இல் இரஸ்ரேலிய உளவு நிறுவனமாகிய மொசாட்டின் உளவாளிகளில் ஒருவரான விக்டர் ஒஸ்ரோவ்ஸ்கி என்பவர் ஒரு நூலை வெளியிட்டார். By Way of Deception:The Making and Unmaking of a Mossad Officer எனப்படும் அந்த நூல் பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியது.அந்த நூலை வெளியிட்ட விக்டர் ஒஸ்ரோவ்ஸ்கி கனடாவில் தஞ்சமடைந்து விட்டார்.அந்த நூலானது மொசாட் எவ்வாறு இலங்கைத்தீவில் போரில் ஈடுபட்ட இரண்டு தரப்புகளுக்கும் உதவிகளை புரிந்தது என்ற தகவல்களை வெளிப்படுத்தியது. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராளிகளுக்கும் இலங்கை அரச படைகளுக்கும் ஒரே மைதானத்தின் இருவேறு பகுதிகளில் பயிற்சி வழங்கப்பட்டது பற்றிய விபரங்கள் அந்நூலில் உண்டு.

மேலும் இலங்கை அரச படை அதிகாரிகள் தொடர்பாக தரக்குறைவாகச் சித்தரிக்கும் பகுதிகளும் உண்டு.இலங்கை அரச படை அதிகாரிகள் ஒருவர் துறைமுகத்தில் வக்யூம் கிளினரோடு இணைக்கப்பட்டிருந்த ஸ்கானிங் திரையைக் காட்டி இதில் என்ன தெரியும் என்று கேட்டபொழுது,நீருக்கடியில் ரகசியமாகச் சுழியோடி வருபவர்களின் குருதிப்பிரிவு உட்பட எல்லா விவரங்களையும் இது காட்டும் என்று ஒரு மொசாட் அதிகாரி அவருக்கு கூறுகிறார்.ஏன் அப்படி பொய் சொன்னாய் என்று கேட்டதற்கு அவர்கள் இப்பொழுது தான் காட்டிலிருந்து வந்திருக்கிறார்கள் என்ற தொனிப்பட அவர் பதில் கூறியதாக ஒரு ஞாபகம்.இந்த நூலை விடுதலைப் புலிகள் இயக்கம் வஞ்சகத்தின் வழியில் என்ற தலைப்பில் மொழிபெயர்த்து தனது போராளிகளுக்கு விநியோகித்ததாகவும் ஒரு ஞாபகம். அந்த நூல் இலங்கை அரசு படைகளை அவமதிக்கிறது என்று கூறி அப்போதிருந்த ஜனாதிபதி பிரேமதாச விக்டர் ஒஸ்ரோவ்ஸ்கிக்கு எதிராக வழக்குத் தொடுக்க முற்பட்டதாகவும் ஒரு ஞாபகம்.

இந்நூல் வெளிவந்த அடுத்தாண்டு,1993இல் நோர்வேயின் அனுசரணையுடனான சமாதான முயற்சிகளின் விளைவாக இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் ஒஸ்லோ உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. உடன்படிக்கையின்படி பலஸ்தீனர்களுக்கு ஒரு தன்னாட்சி அதிகாரக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.இக்கட்டமைப்பு இலங்கைத்தீவில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அதிகம் நட்பாக காணப்பட்டது.தொடக்க காலத்தில் இருந்தே மகிந்த பாலஸ்தீனத்தின் நண்பனாக இருந்து வருகிறார்.பலஸ்தீன-சிறீலங்கா சகோதரத்துவ அமைப்பின் ஸ்தாபகத் தலைவர் அவர். 2014 ஆம் ஆண்டு அவர் பலஸ்தீன அதிகார சபையின் கட்டுப்பாட்டு பிரதேசத்துக்கு விஜயம் செய்தார்.அங்கே அவருக்கு அந்நாட்டின் அதி உயர் விருது ஆகிய Star of Palestine-பலஸ்தீன நட்சத்திரம் விருது வழங்கப்பட்டது.அங்குள்ள ஒரு வீதிக்கு மகிந்தவின் பெயர் சூட்டப்பட்டது.இனப்படுகொலை மூலம் மகிந்த, தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தைத் தோற்கடித்ததாக தமிழ் மக்கள் குற்றஞ்சாட்டிக் கொண்டிருந்த ஓர் அரசியற் சூழலில்,ஐநாவில் மகிந்தவுக்கு எதிராகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக்கொண்டிருந்த ஒரு கால கட்டத்தில்,பலஸ்தீனம் மேற்கண்டவாறு மஹிந்தவைக் கௌரவித்தது.




இப்படிப்பட்டதோர் வரலாற்றுப் பின்னணியில்,இப்பொழுது வெடித்திருக்கும் இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையிலான போரில் தமிழ் மக்கள் எப்படிப்பட்டதொரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்? தர்மத்தின் அடிப்படையில் சொன்னால், போராடும் தேசிய இனம் என்ற அடிப்படையில் சொன்னால்,பாலஸ்தீனத்தைத்தான் ஆதரிக்க வேண்டும்.காசாவில் இப்பொழுது என்ன நடக்கின்றதோ அது தான் வன்னி கிழக்கிலும் நடந்தது. ஆனால் ஒரே ஒரு வித்தியாசம்.பலஸ்தீனர்களுக்கு ஆதரவாக பெரும்பாலான அரபு நாடுகள் உண்டு. ஆனால் தமிழ் மக்களுக்கு ஆதரவாக வெளிப்படையாக எந்த ஒரு நாடும் அன்றைக்குக் குரல் கொடுக்கவில்லை.தமிழ்மக்கள் தனித்துவிடப்பட்டிருந்தார்கள்.ஏறக்குறைய முழு உலகத்தாலும் சுற்றிவளைக்கப்பட்டிருந்த ஒரு நிலை.பலஸ்தீனர்களுக்கு உணவு,மருந்து,தார்மீக ஆதரவு போன்றவற்றைக் கொடுப்பதற்கு அரபு நாடுகள் உண்டு. ஆனால் ஈழத் தமிழர்களுக்கு யார் இருந்தார்கள்?


நிலாந்தன்

அதேசமயம் இஸ்ரேலுக்கு அதன் தொட்டப்பாக்களாகிய மேற்கத்திய நாடுகள் தொடர்ந்து தார்மீக ஆதரவையும் ஆயுத தளபாடங்களையும் வழங்கி வருகின்றன.குறிப்பாக ஆசிய வட்டகைக்குள் இந்தியா போர் தொடங்கிய உடனேயே இஸ்ரேலுக்கு தன் ஆதரவை தெரிவித்துவிட்டது.

இப்பொழுது மேற்சொன்னவற்றை தொகுத்துப் பார்க்கலாம். ஒரு காலம் தமிழ் மக்களுக்கு ஆதரவாக காணப்பட்ட பலஸ்தீனம் பின்னாளில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அதிஉயர் விருதை வழங்கியது.அதே சமயம் இலங்கை அரசாங்கத்துக்கு ஆயுதங்களை விநியோகித்த இஸ்ரேல் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் பயிற்சிகளை வழங்கியதாக விக்டர் ஒஸ்ரோவ்ஸ்கி கூறுகிறார்.

இப்பொழுது இஸ்ரேலை ஆதரிக்கும் மேற்கு நாடுகள் ஐநா மனித உரிமைகள் பேரவையில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றன.அப்படியென்றால் இது விடயத்தில் ஈழத் தமிழர்கள் யாருடைய பக்கம் நிற்க வேண்டும்?

தர்மத்தின் அடிப்படையில் சொன்னால் பலஸ்தீனத்தின் பக்கம்தான். ராஜதந்திரத்தின் அடிப்படையில் பார்த்தால்?

முதலில் அரசியலில் தர்மம் சார்ந்த நிலைப்பாடுகள் உண்டா என்று பார்க்கலாம்.நவீன அரசியலைப் பொறுத்தவரை அறம்,தர்மம்,நீதி என்று எதுவும் கிடையாது.அரசியல்,ராணுவ,பொருளாதார நலன்சார்ந்த அருவருப்பான பேரம் மட்டும்தான் உண்டு.

உதரணமாக,யூதர்களை எடுத்துக் கொள்வோம்.உலகின் மிக நீண்டகாலம் புலப்பெயர்ந்த மக்கள் யூதர்கள்தான்.சுமார் இரண்டு ஆயிரம் ஆண்டு கால புலப்பெயர்ச்சி அது.அதனால் உலகில் அதிகம் ஐரோப்பிய மயப்பட்ட ஆசியர்களாக அவர்கள் மாறினார்கள்.கடந்த நூற்றாண்டில் யூதர்கள் ஐரோப்பாவெங்கும் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள். இரண்டாம் உலகமகா யுத்தச் சூழலில் சுமார் 6 மில்லியன் யூதர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள்.அந்த இனப்படுகொலையின் குழந்தைதான் இஸ்ரேல். இன்னொரு விதமாகச் சொன்னால் யூதப் புலப்பெயர்ச்சியின் குழந்தையே இஸ்ரேல்.ஆனால் ஓர் இனப்படுகொலையின் விளைவாக உருவாகிய யூததேசம்,இன்னொரு இனப்படுகொலைக்குக் காரணமாகியது.உலகில் அதிகம் இனப்படுகொலைக்கு உள்ளாகிய ஒரு மக்கள் கூட்டம் சிறிய பலஸ்தீனர்களை இனப்படுகொலை செய்கின்றது.உலகின் மிகப்பெரிய இனப்படுகொலையில் இருந்து இஸ்ரேல் கற்றுக்கொள்ளாத அறத்தை,தர்மத்தை,நீதியை வேறு யாரிடமிருந்து எதிர்பார்க்கலாம் ?

ஜனநாயகம்,மனிதஉரிமைகள் போன்றவற்றை அரசியல் உபகரணங்களாகப் பயன்படுத்தும் மேற்கத்திய நாடுகள்தான் இஸ்ரேலின் தொட்டப்பாக்கள்.கடந்த 18 ஆம் திகதி ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில்,அமெரிக்கப் பிரதிநிதி பேசத் தொடங்கிய பொழுது, அங்கே பிரசன்னமாகியிருந்த பெரும்பாலான நாடுகளின் பிரதிநிதிகள் எழுந்து நின்று அமெரிக்கப் பிரதிநிதிக்கு தமது முதுகைக் காட்டியபடி நின்றார்கள்.நிகழும் யுத்தத்தில் அமெரிக்காவின் நிலைப்பாட்டுக்கு எதிரான நடவடிக்கை அது.ஆனால் அதே அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகள்தான் ஐநா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைஅரசாங்கத்திற்கு எதிராகத் தீர்மானங்களைக் கொண்டு வருகின்றன.

இஸ்லாமிய நாடாகிய துருக்கி அமெரிக்கா தலைமையிலான நோட்டோவுக்குள் அங்கம் வகிக்கின்றது.ஆனால் ஹமாசுக்கு உதவி புரியும் நாடுகளில் துருக்கி முக்கியமானது. ஒருபுறம் அது ஹமாசுக்கு உதவி செய்கிறது;இன்னொருபுறம் அமெரிக்கக் கூட்டணிக்குள் காணப்படுகின்றது.

கியூபா ஐநா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கத்தின் பக்கம் தான் நிற்கின்றது.அது போராடி வென்ற ஒரு நாடு.ஈழப் போராட்டத்தின் தொடக்கத்தில் கியூபாவும் ஓர் இலட்சிய முன்மாதிரியாகப் போற்றப்பட்டது. ஈழப் போராளிகள் சிலர் தமக்கு கஸ்ரோ என்று பெயர் வைத்துக் கொண்டார்கள். ஆனால் கியூபா,ஐநாவில் தமிழ் மக்களின் பக்கம் நிற்கவில்லை.

எனவே இங்கு தர்மம் ஓர் அளவுகோல் அல்ல.உலகில் எந்த ஒரு நாடும் அது சிறியதோ அல்லது பெரியதோ,தனது நலன் சார்ந்த முடிவுகளைத்தான் எடுக்கும்.நலன்சார்ந்த உறவுகளைத்தான் வைத்துக் கொள்ளும். அறம் சார்ந்து அல்ல.

அரசுடைய தரப்புக்களே அவ்வாறு முடிவு எடுக்கும் பொழுது அரசற்ற சிறிய மக்கள் கூட்டமாகிய ஈழத் தமிழர்கள் எப்படிப்பட்ட முடிவை எடுக்க வேண்டும்?

நீதிமான்களிடம் தான் ஈழத்தமிழர்கள் நீதியை கேட்கலாம் என்றால் உலகில் எங்கேயும் நீதியை கேட்க முடியாது.தேவராஜ்யத்திடம் தான் கேட்கலாம். அல்லது மறைந்த மலையக தலைவர் சௌமியமூர்த்தி தொண்டைமானைப்போல யாகம் செய்யலாம். நவீன அரசியலைப் பொறுத்தவரை பூமி தர்மத்தின் அச்சில் சுற்றவில்லை.அது முழுக்கமுழுக்க நலன்களின் அச்சில்தான் சுற்றிக் கொண்டிருக்கிறது.அப்படியென்றால் ஈழத்தமிழர்கள் இப்பொழுது என்ன நிலைப்பாட்டை எடுப்பது?

ஈழத்தமிழர்கள் மத்தியில் தோன்றிய ஆன்மீகவாதியும் எழுத்தாளரும் அறிஞரும் ஆகிய மு.தளையசிங்கம் ஒரு வார்த்தையை பயன்படுத்துவார். அதுதான் சத்திய தந்திரம்.மு.தளையசிங்கம் ஈழப்போரின் முன்னோடி இலக்கியவாதிகளில் ஒருவர். அவர் எழுதிய ஒரு தனி வீடு நாவல் ஒரு தனி நாட்டுக்கான போராட்டத்தை தீர்க்கதரிசனமாக வெளிப்படுத்தியது என்று அவருடைய ஆன்மீக நண்பர்கள் கூறுவார்கள்.சத்திய தந்திரம் என்றால் என்ன? மகாபாரதத்தில் கிருஷ்ணர் செய்வது அதைத்தான்.பாரதப்போரில் பாண்டவர்கள் வென்றது புஜபலத்தால் அல்லது ஆயுத பலத்தால் அல்லது படை பலத்தால் மட்டும் அல்ல. பெருமளவுக்கு கிருஷ்ணருடைய புத்தி பலத்தால்தான். மகாபாரதத்தை வேறு வார்த்தைகளில் சொன்னால் கிருஷ்ண தந்திரம் எனலாம். அதைத்தான் தளையசிங்கம் சத்திய தந்திரம் என்று சொன்னாரோ தெரியவில்லை. ஆனால் தமிழ் மக்கள் தமது போராட்டத்தின் இதயமாக இருக்கும் அறத்தைக் கைவிடாமல்,உலக ஒழுங்குக்கு ஏற்ப நெளிவு சுழிவோடு நடந்து கொள்வது என்றால் அதுதான் ஒரே வழி.அதை கிறிஸ்துவின் வார்த்தைகளில் சொன்னால் இதயத்தில் புறாக்களைப்போல் கபடம் இல்லாமலும் செயலில் பாம்புகளைப் போல் தந்திரமாகவும் நடந்து கொள்வது. ○



# கிழக்கில் வேகமாக முளைக்கும் சிங்களக் குடியேற்றங்களின் பின்னணியில் புலனாய்வாளர்கள்

## விமானப்படை முன்னாள் அதிகாரி தகவல்

கிழக்கில் சிங்களக் குடியேற்றம் மற்றும் சிங்கள மக்களுக்கு காணிகளைப் பகிரும் திட்டத்தை புலனாய்வாளர்களே செயல்படுத்துகின்றனர். இதற்காக காவி உடை தரித்த குழுவொன்று களமிறக்கப்பட்டுள்ளது என்று பரபரப்புத் தகவலை வெளியிட்டுள்ளார் புலனாய்வு ஊடகவியலாளரும், இலங்கை விமானப்படையின் முன்னாள் அதிகாரியுமான கீர்த்தி ரத்நாயக்க.

இந்த காவி உடை தரித்த குழுவில் உள்ள சிலரை ஐ.எஸ் முத்திரையுடன் களமிறங்குபவர்கள் வெட்டிக்கொலை செய்வார்கள், அதன் பின்னால் நாட்டில் எவ்வாறானதொருநிலை ஏற்படும்? அடுத்த தேர்தலை இலக்கு வைத்த வியூகமாக இது இருக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பிரபல சிங்கள ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமவுடன் இடம்பெற்ற நேர்காணலின் போதே, கீர்த்தி ரத்னாயக்க மேற்படி பகிர்வு தகவுகளை வெளியிட்டுள்ளார்.

கீர்த்தி ரத்னாயக்க இந்தியாவின் 'றோ'அமைப்பின் உளவாளி என்ற குற்றச்சாட்டுக்கும் இலக்கானவர். அவர் அதனை நிராகரித்தும் உள்ளார். மேற்படி நேர்காணலின் போது அவர் கிழக்கு விவகாரம் தொடர்பில் வெளிப்படுத்திய முக்கியமான தகவல் வருமாறு:-

கிழக்கில் காணி பகிர்வு தொடர்பான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. இதனை யார் செய்வது? அம்பிட்டிய சுமன தேரர் என்ற புதுமையான தேரரும், எங்கிருந்து வந்தார்கள் என்பதை அடையாளம் காணமுடியாதுள்ள இதனைச் செய்கின்றனர். இது தொடர்பில் தேடிப் பார்த்தேன். தகவல்கள் கிடைத்தன. இதன் பின்னணியில் மிகவும் சூட்சுமமான முறையில் வேலைத்திட்டமொன்று இடம்பெறுகின்றது.

கிழக்கில் காணிப் பகிர்வு மற்றும் சிங்கள மக்கள் குடியேற்றம் போன்ற நடவடிக்கையில் காவி உடை தரித்த சிலர் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் எங்கிருந்து வந்தார்கள் என்பதை அறிவது கடினமாக உள்ளது. இது புலனாய்வு பிரிவின் 'கேம்' ஆகும்.

காவி உடை தரித்தவர்கள் புலனாய்வு பிரிவினரால் அனுப்பப்பட்ட நபர்களாக இருக்கலாம். எனக்குக் கிடைத்துள்ள தகவலின் பிரகாரம் இன்னும் சில மாதங்களில் அதாவது இந்திய தேர்தலுக்கு முன்னதாக, அந்த காலப்பகுதியில் இலங்கையிலும் தேர்தல் வரும். ஐ.எஸ். முத்திரை குத்தப்பட்ட சிலரால் இந்த காவி உடை தரித்தவர்களின் மூன்று, நான்கு பேர் வெட்டிபடுகொலை செய்யப்படலாம். ஐ.எஸ். முத்திரை குத்தப்பட்டவர்கள் காவி உடை அணிந்தவர்களை வெட்டிக்கொன்றால் நாட்டின் நிலைமை எப்படி இருக்கும்? அப்போது தேசத்தை காக்கும் நாயகன் என்ற கோஷம் எழும். தேசத்தின் காவலன் எனக் கூறப்பட்ட கோத்தாபய ராஜபக்சவுக்கு வயது போய்விட்டது. விஜயதாச ராஜபக்ஷ இளமையானவர், தான் அந்த இடத்துக்கு வரலாம் என அவர் நினைக்கின்றார்.

ஐ.எஸ் என்பது அதிகாரத்துக்கு வருவதற்கு பயன்படுத்தப்படும் சிறந்த கருவியாக உள்ளது. மத்திய கிழக்கிலும் புலனாய்வாளர்களால் தான் ஐ.எஸ். உருவாக்கப்பட்டது .இலங்கையிலும் வேலை திட்டமொன்றை முன்வைத்து மக்களின் ஆசியுடன் ஆட்சிக்கு வர முடியாதவர்கள், குறுக்கு வழியில் ஆட்சிக்கு வருவதற்காக ஐ. எஸ் .மற்றும் முஸ்லிம் விரோதப் போக்கை பின்பற்றுகின்றனர் என்றார.

# போன்னம்பலத்தின் பேரனை அம்பலப்படுத்தும் டக்ளஸ்



மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் நிலைப்பாட்டை பொன்னம்பலத்தின் பேரனும் ஆதரிக்கிறார் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்தொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது கட்சி தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஈழ மக்கள் ஜனநாயக கட்சி தமிழ் மக்களின் யதார்த்தமான நடைமுறை சாத்தியமான விடயங்களையே முன்னகர்த்தி வருகிறது.

மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்பது இன்று நேற்று நாம் வலியுறுத்திய விடையம் அல்ல ஜிஜி பொன்னம்பலத்தின் பேரனும் அதை நிலைப்பாட்டை வலியுறுத்துவது வரவேற்கத்தக்க விடையம்.

அவர் மேலும் தெரிவிக்கையில் அண்மையில் யாழ்ப்பாணத்தில் இரண்டு போராட்டங்களுக்கான அழைப்பை தமிழ் கட்சிகள் சில வெளியிட்டன.

இரண்டு போராட்டங்களும் பிசுபிசுத்து போன நிலையில் இது எமது மக்களின் எதிர்காலத்தை பின்னோக்கி நகர்த்துவதாக அமைந்துவிட்டது.

போராட்டங்கள் மனித குலத்திற்கு அவசியமான நிலையில் நன்மைகளை வரவேற்று தீமைகளை எதிர்க்க போராட்டங்கள் ஆர்ப்பாட்டங்கள் தேவை .


அதற்கு தமிழ் பேசும் சமூகம் விதிவிலக்கல்ல .தமிழ் மக்கள் சார்ந்து இரண்டு விடயத்தை சொல்லலாம் .கடைசியாக நடந்த கதவடைப்பு மனித சங்கிலியினை கூறலாம் . இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஈபிடிபி தேசிய நீரோட்டத்தில் இணைந்தது.அதன் அடிப்படையில் போராட்டம் தேவையற்றது என்று இல்லை. தேவையேற்பட்டால் போராட்டம் செய்ய தான் வேண்டும்.

கதவடையிப்பிற்கு எதிராக எமது உறுப்பினர்கள் முகநூலில் எதிர்ப்பினை வெளியிட்டுள்ளார்கள். ஆனால் நான் எனது முகநூலில் எழுதியிருந்தால் அது 100 இருநூறு விகிதம் உண்மையானது.ஆகவே என்னுடைய முகநூலில் வரும் கருத்துகளே அதிகாரபூர்வமானது.

ஆகவே மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என கூறும் தமிழ் கட்சி உண்மையான நிலைப்பாட்டை கூறினாலும் அக் கட்சியிடம் கொள்கை இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# பிரித்தானியாவில் சவேந்திர சில்வாவுக்கு தடை;

## முன் நகர்த்தப்படும் இராஜதந்திர சந்திப்புக்கள்




இலங்கை இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா உள்ளிட்ட யுத்த குற்றவாளிகளை பிரித்தானியாவின் உலகளாவிய மனித உரிமைகள் தொடர்பான தடைவிதிப்பு அதிகாரசபையின் கீழ் (Global Human Rights Sanction Regime) தடைசெய்வதற்கு பிரித்தானிய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தி, பிரித்தானியாவின் வேவர்ட்ரீ, லிவர்பூல் பகுதி பாராளுமன்ற உறுப்பினர் பவுலா பார்கரின் எம்.பி அவர்களின் பராளுமன்ற உதவியாளருடன் இராஜதந்திர சந்திப்பு ஒன்று மெய்நிகர் வழியாக இடம்பெற்றுள்ளது.

சட்ட ஆலோசகரும் மனித உரிமை செயற்பாட்டாளருமான கீத் குலசேகரம் அவர்கள் தலைமையில் இடம்பெற்ற இந்த முக்கிய சந்திப்பில், தொழில்கட்சிக்கான தமிழர்கள் (Tamils For Labour) அமைப்பின் தலைவர் சென் கந்தையா, மற்றும் இனப்படுகொலையை தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமாக சர்வதேச மையத்தின் (ICPPG) சார்பில் றோய் ஜக்ஷான் கலந்து கொண்டார்.

அத்துடன் இனப்படுகொலையின் நேரடி சாட்சியங்கள் மற்றும் சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களான கணேசலிங்கம் எபினேசர், மாரிமுத்து சுஜித்தா, குணசீலன் கோகுலன், அருணோதயன் சுப்ரமணியம், மற்றும் அபிந்தன் சுப்ரமணியம் கலந்து கொண்டு, தமது அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்கள். கீத் குலசேகரம் அவர்கள் தனது தலைமை உரையின் போது, இலங்கையில் இடம்பெறும் இனப்படுகொலைக்கு வரலாற்று ரீதியாக பிரித்தானியாவே பொறுப்பு என்பதை விளக்கி, தமிழ்மக்களுக்கு நீதி வழங்க வேண்டிய கடமைப்பாட்டையும் எடுத்துரைத்தார். ITJP மற்றும் ICPPG ஆகிய அமைப்புக்கள் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சிற்கு (FCDO) போதுமான ஆதாரங்களை சமர்பித்த போதும் இன்னும் உரிய நடவடிக்கை எடுக்க தவறியிருப்பதனை சுட்டிக்காட்டினார்.

அத்துடன் இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற யுத்த குற்றங்கள் மட்டுமன்றி, தற்போது இலங்கையில் தொடரும் ஆள்கடத்தல் மற்றும் சித்திரவதைகளும் சவேந்திர சில்வாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஆயுத படைகளே மேற்கொண்டுவருவதால் அதற்கும் சவேந்திர சில்வாவே பொறுப்பு என்றும், சந்திப்பில் கலந்து கொண்ட சித்திரவதைக்குள்ளானவர்கள் இதற்கு நேரடிசாட்சி என்றும்தெரிவித்தார்.

சவேந்திர சில்வா யுத்த குற்றங்களில் ஈடுபட்டிருப்பதை ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் குறிப்படப்பட்டிருப்பதையும், அவர்மீது ஏற்கனவே அமெரிக்கா, கனடா பயணத்தடை விதித்துள்ளதையும் எடுத்துக்காட்டிய அவர், அமெரிக்கா, கனடாவின் வழியை பின்பற்றி பிரித்தானியாவும் தடை விதிக்கவேண்டும் என்று கோரி பிரித்தானிய புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்பதையும் விவரித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய சென் கந்தையா அவர்கள், இலங்கை இராணுவத்தளபதி சவேந்திர சில்வாவினை தடைசெய்வதற்கு இதுவரை 50ற்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அனுப்பிய கோரிக்கைகளுக்கு சரியான பதிலை ஊஇஈ௨ தராதது வருத்தத்தை தருவதுடன், தற்போதைய பிரித்தானிய அரசாங்கம் இலங்கைக்கு எதிராக தடை விதிக்க தயக்கம் காண்பிப்பது ஏன் என்று வினவினார். பிரித்தானிய எதிர்கட்சி தலைவர் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரனை செய்ய வேண்டும் என கூறியதை வரவேற்பதாகவும் அதேபோல் இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலையினை பிரித்தானியா அங்கீகரிக்க வேண்டும் என வழியுறுத்தினார்.

கருத்துக்களைஉள்வாங்கிய பாராளுமன்ற உறுப்பினரின் உதவியாளர் சந்தேகங்களை கேட்டு தெளிவடைந்துடன், ஈழத் தமிழர்களின் கோரிக்கையையும் ஆதங்கத்தையும், தமது பகுதியில் வாழும் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் மதிப்பிற்குரிய பவுலா பார்கர் எம்.பி அவர்கள் பிரித்தானிய அரசிற்கு எடுத்துரைக்க தான் உதவுவதாகவும், FCDO இதுவரை நடவடிக்கை எடுக்காமைக்கு காரணத்தை கேட்டு கடிதம் அனுப்புவதாகவும் வாக்களித்தார்.

அந்துடன் கீத் குலசேகரம் கேட்டுக்கொண்டபடி தமிழருக்கான அனைத்துக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் குழு (APPGT) மற்றும் மக்நெட்ஸ்கை தடைகளுக்கான அனைத்துக்கட்சி பாராளுமன்ற குழுக்களில் (APPG for Magnitsky Sanctions) இணையவும், FCDO விற்கு தமிழ்மக்கள் சார்பில் இராணுவத்தளபதி சவேந்திர சில்வாவினை தடைசெய்யக் கோரி தன்னாலான வகையில் அழுத்தம் கொடுப்பதுயும் பவுலா பார்கர் அவர்களுக்கு எடுப்பதுரைப்பதாகவும் வாக்களித்தார். ○

## கோர நிகழ்வும் கொடூர நினைவுகளும்:

ஐங்கரன் விக்கினேஸ்வரா



# குறிவைக்கப்படும் மருத்துவ மனைகள்

## அன்று இந்திய அமைதிப்படை இன்று இஸ்ரேல் இராணுவம்


உலக போர் விதிகளின் படி, எத்தகைய போர் என்றாலும் மருத்துவமனைகளில் மீது தாக்குதல் நடத்தப்படக் கூடாது. காயப்பட்டவரகள் மட்டுமின்றி அப்பாவி மக்களும் மருத்துவமனைகளில் தஞ்சம் புகுவார்கள். இதனால் ஒருபோதும் மருத்துவமனைகள் தாக்குதல் நடத்தப்படக் கூடாது என்பதை ஐ.நா விதியுமாகும்.

### நொடிகளில் தரைமட்டமான காசா மருத்துவமனை:

இதனை மீறி, இஸ்ரேல் காசாவில் உள்ள இருந்த பொது மருத்துவமனையில் தாக்குதல் நடத்தியது பெரும் போர்க் குற்றம் என்றே கருதப்படுகிறது. மேற்கத்தய ஊடகங்கள் ஹமாஸ் மேற்கொண்ட தாக்குதல் காரணமாகவே இந்த உயிரிழப்புகள் இடம்பெற்றன என்றும், பின்னர் இஸ்லாமிய ஜிகாத்தின் ரொக்கட் தவறுதலாக வெடித்ததால் இந்த இழப்புகள் ஏற்பட்டுள்ளது என பொய்ப் பிரச்சாரங்களை மேற்கொள்கின்றன.

எனினும் இந்த அழிவின் அளவு ரொக்கட் தாக்குதலால் ஏற்பட்டுள்ளது என கருதமுடியாத அளவிற்கு காணப்படுகின்றது. அல்ஜசீரா வெளியிட்டுள்ள வீடியோக்கள் மருத்துவமனையின் பல மாடிக்கட்டிடங்கள் தீப்பற்றி எரிவதை காண்பித்துள்ளன. உடல்கள் சிதறி, பெருமளவு இரத்தம் சிந்தியுள்ளதை இடிபாடுகள் இடையே காணமுடிகின்றது.

அங்கிலிகன் தேவாலயத்திற்கு சொந்தமான இந்த மருத்துவமனை முன்கூட்டிய எச்சரிக்கை இன்றியே தாக்கப்பட்டுள்ளது.






இந்த மருத்துமனை காலை 7.30 மணிக்கு தாக்கப்பட்ட, அவ்வேளை இஸ்ரேலின் தாக்குதல்களில் காயமடைந்த பெருமளவானவர்கள் அங்கு காணப்பட்டனர்.

இஸ்ரேல் பொதுமக்கள் குடியிருப்புகள் மீது மேற்கொண்டு வரும் தாக்குதல்களால் மருத்துவமனை பாதுகாப்பான இடம் என கருதி அங்கு தஞ்சமடைந்த பல பொதுமக்களும் காணப்பட்டனர். மருத்துவமனையில் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது பாரிய சத்தம் கேட்டது கூரை இடிந்து சத்திரசிகிச்சை இடம்பெற்றுக்கொண்டிருந்த அறையின் மீது விழத்தொடங்கியது. இது படுகொலை என வைத்தியர் ஹசன் அபு சிட்டா தெரிவித்துள்ளார்.

### யாழ்ப்பாண மருத்துவமனைப் படுகொலைகள் :

தற்போது காசா மருத்துவமனை படுகொலையால் உலகே அதிர்ச்சி அடைந்துள்ள வேளையில், 36 வருடங்களுக்கு முன்பாக யாழ்ப்பாண மருத்துவமனைப் படுகொலைகளின் (Jaffna hospital massacre) நினைவு தினம் தமிழர் தாயகங்களில் நினைவு கூறப்படுகிறது.

ஈழப்போரின் போது 1987 அக்டோபர் 21 இல் இப்படுகொலை இடம்பெற்றது. யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலையில் நுழைந்த இந்திய அமைதிப் படை இராணுவத்தினர் சரமாரியாகச் சுட்டதில் நோயாளிகள், தாதிகள், மருத்துவர்கள், மற்றும் பணியாளர்கள் 90 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.

மனித உரிமைக் அமைப்புக்கள் இந்த படுகொலைகளை இனப்படுகொலை எனக் கூறியுள்ளன. அதே நேரத்தில் புலிகளுக்கும், இந்திய இராணுவத்தினருக்கும் இடையில் இடம்பெற்ற சண்டைகளில் இடையில் அகப்பட்ட பொதுமக்களே கொல்லப்பட்டனர் என இந்திய இராணுவத்துக்குப் பொறுப்பான லெப். ஜெனரல் தெபிந்தர் சிங் தெரிவித்திருந்தார்.

இலங்கை அரசு இத்தாக்குதலை மானுடத்துக்கு எதிரான குற்றங்கள் என 2008 ஆம் ஆண்டில் கூறியது. யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர்களின் மனித உரிமைகள் அமைப்பு, மற்றும் ஜோன் ரிச்சார்ட்சன் போன்ற மேற்குலகக் கண்காணிப்பாளர்கள் மற்றும் பலர் இது ஒரு மனிதப் படுகொலைகள் எனக் கூறியுள்ளனர்.

### இஸ்ரேல் பொய்யும் மறுப்பும் :

காசா மருத்துவமனையில் நோயாளிகள் சுகாதார பணியாளர்கள் அங்கு தஞ்சமடைந்திருந்த மக்கள் மீதான இந்த அதிர்ச்சி தரும் தாக்குதலை எவற்றாலும் நியாயப்படுத்த முடியாது எனகுறிப்பிட்டுள்ள மருத்துவமனை வைத்தியர் ஹசன் அபு சிட்டா ஒரு இலக்கல்ல இந்த இரத்தக்களறி நிறுத்தப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார்.

இந்த மருத்துவமனையில் ஏற்கனவே



ஏனைய காயங்களால் காயமடைந்த பெருமளவானவர்கள் காணப்பட்டனர். தற்போது காயமடைந்த மக்கள் தரையில் வலியில் கதறுகின்றனர்.

ஆயினும் காசாவில் அல்-அஹ்லி மருத்துவமனை மீதான தாக்குதலை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மறுத்துள்ள நிலையில், அவர் பொய் சொல்கிறார் என்று ஐநாவுக்கான பாலஸ்தீன தூதர் ரியாத் மன்சூர் தெரிவித்துள்ளார். அவர் அளித்துள்ள பேட்டியில், ''அவர் ஒரு பொய்யர். மருத்துவமனையை சுற்றி ஹமாஸ் அமைப்பின் செயல்பாடு இருப்பதாகக் கருதி இஸ்ரேல் இந்த தாக்குதலை நிகழ்த்தியதாக இஸ்ரேல் செய்தித் தொடர்பாளர் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டிருந்தார். தற்போது அவர் தனது பதிவை நீக்கிவிட்டார். ஆனாலும், அதன் நகல் எங்களிடம் உள்ளது. இந்த தாக்குதலுக்கு இஸ்ரேல்தான் காரணம். பொய் கதைகளை அவர்கள் புனைவதை ஏற்க முடியாது'' என தெரிவித்துள்ளார். இஸ்ரேலின் தாக்குதலில் காசாவைச் சேர்ந்த 4ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இஸ்ரேல் தரப்பில் 1300 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

காசா மருத்துவமனை மீதான தாக்குதலில் தரைமட்டமாகி அப்பாவி மக்கள் பலியான கொடூரத்தை இஸ்ரேல் மறுத்தாலும், உலக நாடுகள் கண்டனத்தை தெரிவித்துள்ளன.

இஸ்ரேலுக்கு அமெரிக்க அதிபர் ஜோ பிடன் வந்துள்ள நிலையில், இந்த தாக்குதல் காசா பிராந்தியத்தில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. மருத்துவமனை மீதான தாக்குதலுக்கு அரபு நாடுகளும், ஐநாவும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இஸ்ரேல் - பாலஸ்தீன தொடரும் மோதலில் இந்த மருத்துவமனை மீது நடந்த தாக்குதலில் குறைந்தது 500 பேர் உயிரிழந்துவிட்டதாக காசா சுகாதாரத்துறை அறிவித்துள்ளது. இந்த வான் தாக்குதலுக்கு இஸ்ரேல்தான் காரணம் என காசா குற்றம் சாட்டியுள்ளது.

இஸ்ரேல் - காசா இடையே உடனடியாக போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று அரபு நாடுகளும், ஐநாவும் வலியுறுத்தியுள்ளன. ஐநா பொதுச்செயலாளர் ஆண்டனியோ கட்டரஸ் வெளியிட்ட அறிவிப்பில் காசாவில் உள்ள மருத்துவமனை மீதான தாக்குதலில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்த செய்தி மிகுந்த வேதனையை ஏற்படுத்தி இருக்கிறது. இந்த தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறேன். பாதிக்கப்பட்ட மக்களின் குடும்பங்களுக்கு ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறேன். சர்வதேச மனிதாபிமான சட்டப்படி மருத்துவமனைகளும், மருத்துவ பணியாளர்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

நொடிகளில் தரைமட்டமான காசா மருத்துவமனையில் சத்திர சிகிச்சை இடம்பெற்றுக் கொண்டிருந்தவேளை கூரை இடிந்துவிழத் தொடங்கியது என காசா மருத்துவமனை தாக்குதல் குறித்து மருத்துவர் ஒருவர் தெரிவித்தார்.

### காசாவின் மருத்துவபிரிவு செயல் இழக்கிறது:

அடுத்த சில நாட்களில் காசாவின் மருத்துவபிரிவு செயல் இழக்கும் எனவும், கொல்லப்பட்டவர்கள் அனைவரும் பொதுமக்கள் என்பதால் இந்த தாக்குதல் மிக மோசமான கொடூரமாகும். அப்பாவி மக்கள் தங்கள் வீடுகளில் இருந்து தப்பியோடி பாதுகாப்பான இடம் என தாங்கள் கருதிய இடத்தில் தஞ்சமடைந்திருந்தனர் - மருத்துவனையில் சர்வதேசசட்டங்களின் கீழ் அது பாதுகாப்பான இடம் எனவும் மருத்துவமனையின் இயக்குநர் வைத்தியர் சியாட் செகாடா அல்ஜசீராவிற்கு தெரிவித்துள்ளார்.

மிருகத்தனமான படுகொலை என்றும் சர்வதேச விதிகளை இஸ்ரேல் அப்பட்டமாக மீறியுள்ளதாக பாலஸ்தீன அதிபர் அப்பாஸ் தெரிவித்துள்ளார். ஜோர்டானில் இருந்த நிலையில், இந்த கொடூர தாக்குதல் குறித்த தகவல் கிடைத்தவுடன் அவர்

மிகுதி 07 ஆம் பக்கத்தில்...

# குறிவைக்கப்படும் மருத்துவ மனைகள்

## அன்று இந்திய அமைதிப்படை இன்று இஸ்ரேல் இராணுவம்



மேற்கு கரைக்குத் திரும்பினார். அமெரிக்க அதிபருடன் நடக்கவிருந்த சந்திப்பை ரத்து செய்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே இந்தத் தாக்குதலுக்கு அரபு நாடுகள் உட்பட உலகின் பல்வேறு நாடுகளும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

### மிருகத்தனமான தாக்குதல்:

துருக்கி அதிபர் எர்டோகனும் இஸ்ரேல் நடத்திய தாக்குதலை வன்மையாகக் கண்டித்துள்ளார். காசாவில் இஸ்ரேலில் நடத்தும் மிருகத்துத்தை நாம் அனைவரும் இணைந்து தடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன் என்று அவர் தெரிவித்தார்.

இஸ்ரேல் தாக்குதலை ''போர் குற்றம், இனப்படுகொலை'' என்று குறிப்பிட்டு ஓமன் அரசும் கண்டனம் தெரிவித்துள்ளது. இஸ்ரேலின் இந்த கொடூர தாக்குதல்களை மேற்குலக நாடுகள் உடனடியாக தடுக்க வேண்டும் என அரபு லீக் தலைவர் அஹ்மத் அபுல் கெயிட் வலியுறுத்தியுள்ளார். அதே போல ஜோர்டான், எகிப்து, துருக்கி உள்ளிட்ட பல்வேறு அரபு நாடுகளும் இஸ்ரேலின் இந்தத் தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

காசாவில் இருந்து வரும் தகவல்கள் பேரழிவு தருவதாகக் கூறியுள்ள கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள் எப்போதும் மதிக்கப்பட வேண்டும் என்றும் கூறினார். அரபு நாடுகள் மட்டுமின்றி உலக சுகாதார அமைப்பு உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளும் இந்தத் தாக்குதலுக்குக் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து உலக சுகாதார அமைப்பு, ''பாலஸ்தீனப் பகுதியில் உள்ள பொதுமக்கள் மற்றும் சுகாதார ஊழியர்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். காசாவில் முழு வீச்சில் செயல்பட்டு வந்த மருத்துவமனையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது' என்று கூறப்பட்டுள்ளது.

### உலக நாடுகள் கண்டனம்:

காசா மருத்துவமனை மீதான தாக்குதலுக்குக் கண்டனம் தெரிவித்துள்ள பாகிஸ்தான், கடந்த சில நாட்களாக இஸ்ரேல் நடத்தி வரும் கொடூர தாக்குதலுக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் எனச் சர்வதேச சமூகத்தைக் கேட்டுக் கொள்வதாகத் தெரிவித்துள்ளது. அதேபோல யுனிசெப் அமைப்பும் இந்தத் தாக்குதலுக்குக் கண்டனம் தெரிவித்துள்ள நிலையில், காசா பகுதியில் உள்ள குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

பாலஸ்தீனத்தின் காசா அல்-அஹ்லி மருத்துவமனை மீது இஸ்ரேல் நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதலில் மருத்துவமனையில் தஞ்சமடைந்திருந்த 500க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்ட துயரசம்பவத்திற்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் பாலஸ்தீன அரசு 3 நாட்கள் துக்க தினமாக அறிவித்துள்ளது.

தொடர்ந்து வரும் இஸ்ரேல் - ஹமாஸ் தாக்குதலில், தரை வழியாகவும் வான் வழியாகவும் இஸ்ரேல் தாக்குதல் நடத்திவருகின்றது. இந்த தாக்குதலில் இது வரையில் 5000 க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

காசா பகுதியிலிருந்து மக்கள் வெளியேற கால அவகாசம் கொடுக்கப்பட்டிருந்த நிலையில் இஸ்ரேல் விமான படை பலஸ்தீன் மக்களை குறிவைத்து தாக்குதல் நடத்தியுள்ளது.

இஸ்ரேலின் இந்த அதிபயங்கர தாக்குதலுக்கு பாலஸ்தீனம், எகிப்து உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. தற்போது இஸ்ரேலின் இக்கொடூர தாக்குதலைக் கண்டித்து பாலஸ்தீனத்தின் மேற்கு கரையில் கண்டனப் போராட்டங்கள் வெடித்துள்ளன.

2007 இல் ஹமாஸ் அமைப்பினர் காசா ஆட்சியை கைப்பற்றிய பின்னர் ஹமாசிற்கும் இஸ்ரேலிற்கும் இடையில் இடம்பெற்றுவரும் மோதல்களில் ஒரே நாளில் மிக அதிகளவானவர்கள் கொல்லப்பட்ட கோரமான சம்பவமாக இது விளங்குகின்றது.

### யாழ்ப்பாண மருத்துவமனைப் படுகொலைகள்:

யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலை வட மாகாணத்தில் மக்கள் அடர்ந்து வாழும் யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களுக்கு அடிப்படை மற்றும் உயர்தர மருத்துவ வசதிகளை வழங்கும் ஒரேயொரு மருத்துவமனை ஆகும்.

போர்க்காலங்களில் இப்பகுதி போரில் ஈடுபடுபவர்கள் அணுகாத வண்ணம் பாதுகாக்கப்பட்ட ஒரு மருத்துவமனையாக இயங்கி வந்தது. 1987 அக்டோபர் 21 தீபாவளி விடுமுறை நாளாகும். அன்றும் முதல் நாட்களிலும் குடாநாட்டின் பல்வேறு பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்ற இந்திய இராணுவத்தினரின் ஏவுகணை வீச்சுகளில் இறந்த 70 இற்கும் அதிகமான பொதுமக்களின் இறந்த உடல்கள் மருத்துவமனையின் பிணவறையில்



வைக்கப்பட்டிருந்தன.

விடுதலைப் புலிகளுக்கும், இந்திய அமைதிப் படையினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலை அடுத்து, யாழ் நகரை இந்திய இராணுவம் கைப்பற்றும் என்ற அச்சம் நிலவியது. இதனால் மருத்துவமனையின் ஊழியர்கள் சிலர் அச்சத்தில் பணிக்குச் செல்லத் தயக்கமடைந்த நிலையிலும் பலர் தமது கடமைகளுக்குச் சென்றிருந்தனர்.

அக்டோபர் 21, 1987 காலையில் யாழ் கோட்டைப் பகுதியில் இருந்து மருத்துவமனைப் பகுதியை நோக்கி பீரங்கிக் குண்டுத் தாக்குதல்களும், உலங்கு வானூர்திகளில் இருந்து குண்டுத் தாக்குதல்களும் நடாத்தப்பட்டன.

அன்று மாலை இந்திய இராணுவத்தினர் மருத்துவமனையின் முன்பக்கமாக உள்ளே வந்தனர். நடைபாதை வழியாக உள்ளே வந்த அவர்கள் அங்கிருந்த அனைவரையும் உள்ளே செல்லுமாறு பணித்தனர். அதன் பின்னர் மேற்பார்வையாளரின் அலுவலகத்தினுள்ளும் ஏனைய அறைகளுள்ளும் சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்தினர் என நேரில் கண்டவர்களின் கூற்றுப் படி, பல பணியாளர்கள் இறந்து வீழ்ந்தனர்.

இவர்களில் மேற்பார்வையாளர், மற்றும் முதலுதவி வண்டி சாரதியும் அடங்குவர். ஒரு படையினன் பணியாளர் ஒருவரை நோக்கி கிரனேட்டு எறிந்ததில் பலர் கொல்லப்பட்டனர். இன்னும் ஒருவரின் கூற்றுப் படி, இந்திய இராணுவத்தினர் ஊடுகதிரியல் அறைக்குள் நுழைந்து அங்கிருந்த பலரைச் சுட்டுக் கொன்றனர். அதேவேளை எட்டாம் இலக்க வார்டில் இருந்து நோயாளிகள் பலர் இங்கு பாதுகாப்புக்காக தங்கியிருந்தனர். இறந்து விட்டதாகத் தரையில் படுத்திருந்த சிலர் உயிர் தப்பினர்.

இரவு முழுவதும் துபாக்கிச் சூடுகளும் எறிகணை வீச்சுகளும் இடம்பெற்றன என நேரில் கண்டவர்களின் சாட்சியங்கள் தெரிவிக்கின்றன.

அடுத்த நாள் அக்டோபர் 22, 1987 காலையில் மருத்துவர் சிவபாதசுந்தரம் மேலும் மூன்று தாதிகளுடன் மருத்துவமனையில் இருந்து வெளியேறினர். அவர்கள் தமது கைகளை மேலே தூக்கியவாறு 'நாம் சாதாரண மருத்துவர்களும் தாதிகளும். நாம் சரணடைகிறோம்,' எனக் கத்தியபடி சென்றனர். அவர்கள் மீதும் துப்பாக்கிச் சூடுகள் நடத்தப்பட்டன. மருத்துவர் சிவபாதசுந்தரம் அங்கே கொல்லப்பட்டார், தாதிகள் மூவரும் கடும் காயங்களுக்குள்ளானார்கள்.

இதன்பின் 1100 மணியளவில் இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் வார்டு ஒன்றினுள் நுழைந்தார். ஒரு பெண் மருத்தவர் எதிரில் எதிர்ப்பட்டார். அவர் இராணுவ அதிகாரிக்கு நிலைமையை விளக்கிய பின்னர் அவர் ஏனைய பணியாளர்களை கைகளைத் தூக்கியவாறு வெளியேறி வருமாறு கூறினார். அங்கு உயிருடன் இருந்த 10 பேர் வெளியேறினர். வெளியேறும் போது அவர்கள் மருத்துவர் கணேசரத்தினம் இறந்து கிடப்பதைக் கண்டனர். அன்று மாலை இறந்தவர்கள் அனைவரினதும் உடல்கள் சேகரிக்கப்பட்டுத் தகனம் செய்யப்பட்டன என இக்கோர நிகழ்வை நேரில் கண்டவர்களின் சாட்சியங்கள் தெரிவிக்கின்றன.

### பாரிய மனிதப் படுகொலை

ஆனாலும் யாழ் மருத்துவமனை வளாகத்தினுள் இருந்து தம்மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், இடையில் அகட்ட பொதுமக்களே கொல்லப்பட்டனர் என்றும் இந்திய இராணுவம் தெரிவித்தது. லெப். ஜெனரல் தெப்பிந்தர் சிங் இதனை மீண்டும் வலியுறுத்தினார். ஆனால், இத்தாக்குதல் தூண்டுதல் அற்ற பொதுமக்கள் படுகொலைகள் என மனித உரிமை அமைப்புக்களும், இலங்கை அரசும் தெரிவித்தது.

# நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் கருத்தரங்கிற்கு தடை; தமிழக தி.மு.க. அரசின் தமிழர் விரோதச் செயல் கண்டனத்துக்குரியது

## தமிழ் தேசியப் பண்பாட்டுப் பேரவை கண்டனம்



நாடு கடந்த தமிழீழ அரசினால் 15/10/23 ஒழுங்கு செய்யப்பட்ட 'இலங்கை மலையகத் தமிழர்களின் 200 ஆண்டுகளின் துயரம்' என தலைப்பிடப்பட்ட கருத்தரங்கிற்கு தி.மு.க தலைமையிலான தமிழ்நாட்டு அரசு அனுமதி மறுத்திருப்பதை தமிழ் தேசிய பண்பாட்டு பேரவை வன்மையாக கண்டிக்கின்றது.

ஈழத்தில் 2009 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலை புலிகளின் ஆயுத மௌனிப்புக்கு பின்னர் ஈழத்தமிழர்களது இன விடுதலைப் போராட்டத்தை அரசியல் ரீதியாக சர்வதேச அரங்கில் முன் நகர்த்திக் கொண்டிருக்கும் ஒரு வலுவான அமைப்பாக இன்றுவரை நாடு கடந்த தமிழக அரசாங்கமே செயற்படுகின்றது.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் எவ்விதமான செயற்பாடுகளையும் ஈழத்தில் செய்யவிடாது சிறீலங்கா அரசாங்கம் பாரிய தடைகளை விதித்திருக்கின்றது.

இந்த அமைப்பின் முக்கிய செயற்பாட்டாளர்ளும் நாட்டிற்குள் வரமுடியாதபடி தடை உத்தரவு போட்டிருக்கின்றது.

இதற்கான பிரதான காரணம் சிறீலங்கா அரசுக்கு அரசியல் ரீதியாக பல வழிகளிலும் சர்வதேச அரங்கில் பாரிய அழுத்தங்களை இன்றுவரை பிரயோகிக்கின்ற ஓர் பலமான அமைப்பாக நாடு கடந்த தமிழீழ அரசு செயற்படுகின்றமையே காரண்மாகும்

இவ்வாறான சூழ்நிலையில் இன்று இருக்கக்கூடிய தி.மு.க தலைமையிலான தமிழக அரசு ஈழத் தமிழர்கள் விவகாரங்களில் அன்று தொடக்கம் இன்று வரை எதிராகவே தமிழர் விரோதப் போக்கில் செயல்பட்டு வருகின்றது. இதற்கு சான்றாக 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் இறுதிக் கட்ட யுத்தம் ஓர் உதாரணமாகும்.

நாடு கடந்த தமிழீழ அரசின் செயற்பாடுகள் தமிழகத்தில் தொடரும் தொடர வேண்டும் இதற்கு எதிராக தமிழகத்தில் எந்த கட்சிகள் தடை போட்டாலும் அத் தடைகளை அவர்கள் திருப்பி பெற்றுக் கொள்ள வேண்டும். இல்லையேல் தடைகள் அனைத்தும் தமிழக தொப்புள் கொடி உறவுகளால் அனைத்து வழிகளாலும் எதிர்க்கப்படும் என்பதை தமிழ்நாடு அரசுக்கு மிக தெளிவாக வலியுறுத்துவதோடு மேலும் தி.மு.க தலைமையிலான தமிழ்நாட்டு அரசின் தமிழர் விரோதச் செயல்களையும் தமிழ் தேசிய பண்பாட்டு பேரவை வன்மையாக கண்டிக்கின்றது.

**எஸ்.நிஷாந்தன்**
**தலைமை ஒருங்கிணைப்பாளர்**
**தமிழ் தேசியப் பண்பாட்டுப் பேரவை**



## சர்வதேச நலனில் இந்தியாவின் இரட்டை நிலையும் அமெரிக்க நலனும்



# ‘புலிகளை அழித்த பின்னர் தீர்வு’ இப்போது அதே கதை பலஸ்தீனத்துக்கு



விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் அவர்களை அழித்த பின்னர்தான் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று ஜே.ஆர். ஜயவர்த்தனாவில் இருந்து தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரையும் அன்று மார்தட்டியிருந்தனர்.

புலிகள் வேறு தமிழ் மக்கள் வேறு எனவும் நியாயம் கற்பித்திருந்தனர். இதனை உள்வாங்கியே புலிகளை அழிக்க 2002 பெப்ரவரியில் சமாதானப் பேச்சு ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் திட்டம் வகுப்பட்டிருந்தமை இஸ்ரேல் - பலஸ்தீன போர் ஆரம்பமானதில் இருந்து வெளிச்சத்துக்கு வருகிறது.

உலகில் பயங்கரவாதம் என ஒன்று இல்லை. அதனை உருவாக்குவது அல்லது அதற்குக் காரணமாக இருப்பது வல்லாதிக்க நாடுகள்தான். ஆனால் விடுதலை இயக்கங்களைப் பயங்கரவாதிகளாகச் சித்தரித்து அந்த இயக்கங்கள் எந்த அரசுக்கு எதிராகப் போரிடுகின்றதோ, அந்த அரசைக் காப்பாற்றுவதே அமெரிக்கா இந்தியா போன்ற நாடுகளின் வேலை.

2020 ஜனவரியில் நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற விவாதம் ஒன்றில் உரையாற்றிய இரா. சம்பந்தன், விடுதலைப் புலிகளை அழித்துப்

> வன்னி போர் பற்றிய 2010 நிபுணர் குழு அறிக்கையும் காசா படுகொலைகளும் ஐ.நாவுக்குத் தெரியவில்லையா?

போரை முடிவுக் கொண்டு வந்த பின்னர் நிரந்தர அரசியல் தீர்வு வழங்கப்படும் என்றும் அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அமெரிக்க இந்தியத் தூதுவர்கள் 2009 ஜனவரி மாதம் தன்னைச் சந்தித்து கேட்டிருந்தாக விபரித்தார்.

அரசியல் தீர்வு ஏற்படும் என்ற உறுதிமொழியை நம்பியதாகவும் ஆனால் பத்து ஆண்டுகள் சென்ற பின்னரும்கூட தீர்வு ஏற்படவில்லை எனவும் அமெரிக்க இந்திய அரசுகள் தன்னை ஏமாற்றியுள்ளதாகவும் சம்பந்தன் கவலை வெளியிட்டிருந்தார்.



இப்போது இஸ்ரேல் - பலஸ்த்தீனம் போர் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் கனடா பிரதமர் யஸ்ரின் ட்ரூடோ என்ன சொல்கிறார்? ஹமாஸ் இயக்கம் வேறு பலஸ்தீன மக்கள் வேறு என்கிறார். ஹமாஸ் அழிக்கப்பட்ட பின்னரே பலஸ்தீனயர்களுக்கு தீர்வு என்றும் நாடாளுமன்றத்தில் சென்ற வியாழக்கிழமை ட்ரூடோ கூறியிருக்கிறார்.

இதனையே அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும் சொல்கிறார். பிரித்தானிய நாடாளுமன்றத்திலும் ஹமாஸ் பயங்கரவாத இயக்கம் என்று பகிரங்கமாகக் கூறப்பட்டுள்ளது.

ஆனால் காசா மருத்துவமனை மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலுக்குக் கண்டனம் வெளியிடப்படவில்லை. இருந்தாலும் பாதிக்கப்பட்ட பலஸ்தீன மக்களுக்காக நூறு மில்லியன் டொலர்களை வழங்கவுள்ளதாக ஜோ பைடன் அறிவித்திருக்கிறார்.

ஐரோப்பிய நாடுகளும் நிதியுதவிகளை வழங்கவுள்ளதாக அறிவித்திருக்கின்றது. ஆனால் இஸ்ரேல் காசா மீது நடத்தும் தாக்குதலை பகிரங்கமாகக் கண்டிக்கவேயில்லை.

முதன் முதலில் கடந்த ஏழாம் திகதி ஹமாஸ் இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலைக் கண்டித்த மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள், இஸ்ரேல் பலஸ்தீனம் மீது கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக மேற்கொண்ட அத்துமீறல்களைக் கண்டுகொள்ளவில்லை. கண்டிக்கவுமில்லை.

இந்த அத்து மீறல்களை எதிர்ப்பதற்கான அதி உச்ச ஏற்பாடாகவே ஹமாஸ் இஸ்ரேல் பொதுமக்கள் மீதும் தாக்குதல் நடத்தியிருந்தது. ஆகவே நியாயம் மூடி மறைக்கப்படுகின்றது?

அரசியல் நியாயம் என்பது இஸ்ரேல் அரசுக்குச் சாதகமாகவும் மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் புவிசார் அரசியல் - பொருளாதார நோக்கிலும் அமைந்துள்ளதை இந்த போர் பட்டவர்த்தனமாகக் காண்பிக்கிறது.



வன்னி பெருநிலப்பகுதியில் 2009 இல் இலங்கை அரசாங்கம் நடத்திய போர் சாட்சியங்கள் இன்றி நடத்தப்பட்டதாகச் சம்பந்தன் 2010 இல் நாடாளுமன்றத்தில் கூறியிருந்தார்.

கிளிநொச்சியில் இருந்து ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகங்கள் அனைத்தும் முற்றாக மூடப்பட்டு அங்கு பணிபுரிந்த அனைத்து வெளிநாட்டவர்களும் கொழும்புக்கு அழைக்கப்பட்டிருந்ததாகவும் சம்பந்தன் எடுத்துக் கூறியிருந்தார். கிளிநொச்சியில் அலுவலகங்கள் மூடப்பட்டபோது அங்கு ஒன்றுகூடிய மக்கள் தங்களைத் தனியாகக் கைவிட்டு வெளியேற வேண்டாம் என்று கோசம் எழுப்பி அழுது புலம்பினர் என்றும் சம்பந்தன் சுட்டிக்காட்டியிருந்தார்.

ஆகவே சாட்சியங்கள் இன்றி வன்னி பெரு நிலப்பரப்பில் நடந்த அத்தனை கொலைகளுக்கும் இலங்கை அரசு பொறுப்பேற்க வேண்டும் என்று சம்பந்தன் நாடாளுமன்றத்தில் பகிரங்கமாகக் கோரியிருந்தார். ஆனால் சிங்கள ஆட்சியாளர்கள் இதுவரை பொறுப்புக்கூறவில்லை. அத்துடன் அமெரிக்க இந்திய அரசுகள் தங்கள் மனச்சாட்சியை இதுவரை தொட்டுப் பார்க்கவுமில்லை.

இந்த நிலையில் பலஸ்தீனம் மீது இஸ்ரேல் மேற்கொள்ளும் தாக்குதல்களைக் கண்டுகொள்ளாமல் ஹமாஸ் இயக்கத்தை அழிப்பதிலேயே மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் குறியாக இருக்கின்றன. பலஸ்தீனம் தனிநாடு என்ற நிலைப்பாட்டை ஏற்று 139 நாடுகள் 2012 இல் ஐ.நா சபையில் வாக்களித்திருக்கின்றன.

வன்னியில் மக்கள் கொல்லப்படுவதைத் தடுக்க சர்வதேசம் தவறியதாக 2010 நிபுணர் குழு அறிக்கையில் உண்டு. இதனை ஒரு அனுபவப் பாடமாக எடுத்துப் பலஸ்தீன போர் விவகாரத்தில் கையாள ஐ.நா தயங்குவது ஏன்?

இந்தியா ஆதரித்தாலும் இஸ்ரேல் மேற்கொள்ளும் இனஅழிப்புகள் பற்றி வாய்திறக்கவில்லை.

மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குச் சாதகமான முறையிலும் அதேநேரம் ரசிய-சீனக் கூட்டுக்கு ஏற்ற முறையிலும் இரட்டை நிலைப்பாட்டுடன் இந்தியா இயங்குகின்றது. இதேபோன்றுதான்

மிகுதி 09 ஆம் பக்கத்தில்...

> **2020 ஜனவரியில் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதம் ஒன்றில் உரையாற்றிய இரா. சம்பந்தன், விடுதலைப் புலிகளை அழித்துப் போரை முடிவுக் கொண்டு வந்த பின்னர் நிரந்தர அரசியல் தீர்வு வழங்கப்படும் என்றும் அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அமெரிக்க இந்தியத் தூதுவர்கள் 2009 ஜனவரி மாதம் தன்னைச் சந்தித்து கேட்டிருந்தாக விபரித்தார்.**



# சர்வதேச நலனில் இந்தியாவின் இரட்டை நிலையும் அமெரிக்க நலனும்



ஈழத்தமிழர் விவகாரத்திலும் இந்தியா இரட்டை நிலைப்பாட்டை முன்னெடுக்கிறது.

ஆகவே விடுதலை இயக்கங்களைத் தலையெடுக்கவிடக் கூடாது என்ற வன்மம் ஏன் இந்திய மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்படுகின்றது? ஐக்கிய நாடுகள் சபை, ஹமாஸ் இயக்கத்தைக் கண்டித்தளவுக்கு இஸ்ரேல் அரசை ஏன் கண்டிக்கவில்லை.

ஹமாஸ் தாக்குதல்களில் இஸ்ரேலில் சாதாரண அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதை மறுக்க முடியாது. ஆனால் அதனையும் விட மிகக் கொடூரமாக பலஸ்தீன மக்கள் கடந்த எழுபது வருடங்களாக இன அழிப்புக்குள்ளாகி வருகின்றனர். அவர்களின் பாராம்பரிய பிரதேசங்கள் அபகரிக்கப்பட்டுள்ளன. பலஸ்தீன பொருளாதார வளங்கள் இஸ்ரேல் அரசினால் அபகரிக்கப்பட்டும் அழிக்கப்பட்டுமுள்ளன. ஆனால் சர்வதேச நீதி என்ன?

ஒரு கட்டத்தில் பலஸ்தீன மக்களுக்காக மத்திய கிழக்கு நாடுகள் அமெரிக்காவுடன் இணங்கிப் போகவும் தயாராக இருந்தன. எண்ணெய்வளங்களைப் பரிமாறவும் அதற்குரிய ஒப்பந்தங்களில் கைச்சாத்திடவும் இணங்கியிருந்தன.

ஆனால் பலஸ்தீனம் மீதான இஸ்ரேலின் தொடர்ச்சியான இன அழிப்பினால் மத்திய கிழக்கு நாடுகள் அமெரிக்காவுடனான உறவைத் தொடருவதற்குத் தயக்கம் காண்பித்திருந்தன.

2012 இல் ஐக்கிய நாடுகள் சபையில் பலஸ்தீனம் தனி நாடாக இருக்க வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டபோது அமெரிக்கா ஆதரவு வழங்கவில்லை. ஆனாலும் அமெரிக்காவுடன் மத்திய கிழக்கு நாடுகள் உறவைப் பேணி வந்தன.

2016 இல் அமெரிக்காவில் பதவிக்கு வந்த டொனால்ட் ட்ரமப் மேற்கொண்ட பலஸ்தீன எதிர்ப்பு நடவடிக்கைகள் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்தன.ஆனால் 2020 ஜனவரியில் பதவிக்கு வந்த ஜோ பைடன் நிர்வாகம் அதனைச் சீர்ப்படுத்தியிருக்க



வேண்டும். மாறாக மத்திய கிழக்கு நாடுகளுடன் மென்போக்கு நகர்வைக் கையாண்டு டொனால்ட் ட்ரமப் மேற்கொண்ட அனைத்துச் செயற்பாடுகளையும் அப்படியே முன்னெடுத்து இஸ்ரேலுக்கு ஜோ பைடன் வலுச் சேர்த்திருக்கிறார்.

இப் பின்புலத்திலேயே பலஸ்த்தீனம் மீது ஆரம்பிக்கப்பட்டுள்ள போர், மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட ஐக்கிய நாடுகள் சபை அதன் கீழ் இயங்கும் அனைத்துச் சர்வதேச பொது அமைப்புகள் மீதும் சந்தேகத்தை ஏற்பட்டுத்தியுள்ளன.

ஏனெனில் ஈழத்தமிழர் விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபை தவறிழைத்திருக்கிறது என ஐ.நா.நிபுணர்குழு 2010 இல் வெளியிட்ட அறிக்கையில் பகிரங்கமாகச் சுட்டிக் காட்டியிருந்தது. பொதுமக்கள் கொல்லப்படுவதை சர்வதேசம் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

ஜெனீவா மனித உரிமைச் சபை அறிக்கைகளிலும் பொதுமக்கள் கொல்லப்பட்டபோது தடுத்து நிறுத்த சர்வதேசம் நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டது என்று சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை குற்றம் சுமத்தியிருந்தார்.

ஆனால் தற்போது ஹமாஸின் தாக்குதலையடுத்து பலஸ்தீனம் மீது இஸ்ரேல் நடத்தும் தாக்குதலில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டும் பத்து இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்தும் அவலப்படுகின்றனர். அதனைத் தடுக்க ஐ.நா கடந்த பன்னிரெண்டு நாட்களாக நடவடிக்கை எடுக்கவில்லை.

வன்னி பெருநிலப்பரப்பில் இலட்சக்கணக்கில் உயிரிழப்புகள் ஏற்பட்ட போது அதனைத் தடுக்கத் தவறிய ஐ.நா ஏன் பலஸ்தீனத்தில் தடுக்க முற்படவில்லை? முள்ளிவாய்க்கால் இறுதிக்கட்ட போர் தொடர்பாக ஐ.நா 2010 இல் வெளியிட்ட நிபுணர்குழு அறிக்கையை ஒரு பாடமாக எடுத்துப் பலஸ்தீனத்தில் உயிரிழப்புகள் ஏற்படுவதைத் தடுக்கலாமல்லவா?

ஐ.நாவில் அங்கீகாரம் உள்ள பலஸ்தீன மக்கள் இஸ்ரேலினால் கொல்லப்படுவதை ஐ.நா ஏன் பார்த்துக் கொண்டிருக்கிறது?

ஆகவே ஐ.நா சபையின் பின்னால் செயற்படுவது யார்?இக் கேள்விகளுக்கு பதில் சொல்லவேண்டிய பொறுப்பு யாருடையது? வல்லரசு நாடுகளின் புவிசார் அரசியல் - பொருளாதார நலன் என்பது இதுதான். அதாவது மனித உரிமை, ஜனநாயகம் என்று தமது தேவைக்கு ஏற்ப அளந்து பேசுவது.

அத்துடன் புவிசார் அரசியல் - பொருளாதார நலன்களைப் பெறும் நோக்கில் மனித உரிமை மீறல், இன அழிப்பு என்று காண்பித்து குறித்த அரசுகளுக்கு எச்சரிக்கை விடுப்பதும் இந்த வல்லாதிக்க நாடுகளின் வழமை. இதற்கு வசதியாக ஐ.நா சபையும் ஜெனீவா மனித உரிமைச் சபையும் பக்கபலமாக இயங்குகின்றன.

விடுதலைப் புலிகளை அழித்த பின்னரே தீர்வு என்று வாக்குறுதி வழங்கப்பட்டு இதுவரையும் எந்த ஒரு தீர்வும் இல்லாமல் ஈழத்தமிழர் தொடர்ந்து இன அழிப்புக்கு உள்ளாவது போன்று, ஹமாஸ் இயக்கம் அழிக்கப்பட்டால் பலஸ்தீன மக்களும் தொடர்ந்தும் இஸ்ரேல் அரசினால் இன அழிப்புக்கு உள்ளாவர் என்பது பரகசியம்

விடுதலை இயக்கங்கள் மீதான தவறுகள் கண்டுபிடிக்கப்படுதல் அல்லது திட்டமிட்டு தவறுகளை உருவாக்குதல் என்பதன் பின்னணியையும் இங்கிருந்துதான் நோக்க வேண்டும்.

2009 இல் விடுதலைப் புலிகளுக்கு நடந்ததையும் தற்போது ஹமஸ் இயக்கத்துக்கு நடந்து கொண்டிருப்பதையும் இப் பின்புலத்தில் இருந்துதான் ஆராய வேண்டும்.

உலகில் பயங்கரவாதம் என ஒன்று இல்லை. அதனை உருவாக்குவது அல்லது அதற்குக் காரணமாக இருப்பது இந்த வல்லாதிக்க நாடுகள்தான். ஆனால் விடுதலை இயக்கங்களைப் பயங்கரவாதிகளாகச் சித்தரித்து, அந்த இயக்கங்கள் எந்த அரசுக்கு எதிராகப் போரிடுகின்றதோ அந்த அரசைக் காப்பாற்றும் நகர்வுகளிலேயே அமெரிக்கா போன்ற வல்லாதிக்க நாடுகள் முனைப்புக் காட்டும்.

குறிப்பாக இஸ்ரேல் அரசை வேறு பார்வையிலும் சிறிய நாடான இலங்கையை இந்தோ - பசுபிக் விவகாரத்திலும் அமெரிக்கா கையாள்வதை அவதானிக்க முடியும். இதற்கு இந்தியாவும் பின்னணியாகச் செயற்படுகிறது.

ஏனெனில் இந்திய மாநில அரசுகளுக்கு, உரிய அதிகாரங்கள் இல்லை. இந்திய மத்திய அரசிடமே அனைத்து அதிகாரங்களும் உண்டு. இதனை மையமாகக் கொண்டு தமது இந்தியப் பிராந்தியப் பாதுகாப்புக் கருதி ஈழத்தமிழர்களுக்கும் அரைகுறைத் தீர்வான பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை இந்தியா இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து 1987 இல் உருவாக்கியிருந்தது.

அதற்கு எதிராக இந்திய இராணுவத்துடன் இடம்பெற்ற போரில் ஆயிரக்கணக்கில் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டனர். 1987 இல் இந்திய இராணுவம் யாழ் மருத்துவமனை மீது தாக்குதல் நடத்தி 187 பொதுமக்களையும் வைத்தியர்கள் தாதியர்கள் பலரையும் கொலை செய்தது. 2009 இல் வன்னி பெருநிலப்பரப்பில் நடந்த இறுதிப் போரில் கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு மாத்தளன் மருத்துவ மனைகள் மீது இலங்கை இராணுவம் தாக்குதல் நடத்தி பல்லாயிரக்கணக்கில் பொதுமக்களைக் கொலை செய்தது.

இப்போது காஸா மருத்துவமனை மீது இஸ்ரேல் தாக்கியுள்ளது. ஆனால் இதுவரையும் சர்வதேசக் கண்டனங்கள் வெளிவரல்லை. முப்பது வருட ஆயுதப் போரை இல்லாதொழிக்க இலங்கை அரசாங்கத்துக்கு அமெரிக்க இந்திய அரசுகளும் சீனாவும் மற்றும் சில நாடுகளும் முரண்பாட்டில் உடன்பாடாக ஒத்துழைப்பு வழங்கியதாகப் பிரதமராக இருந்த அமரர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா 2009 டிசம்பரில் நாடாளுமன்றத்தில் பெருமையாகக் கூறியிருந்தார்.

இதன் காரணத்தினால் வல்லாதிக்க நாடுகளின் நலன் சார்ந்து தமிழ் இனஅழிப்பு என்பதைச் செவிமடுக்காமல் சர்வதேச போர்க் குற்ற விசாரணைக்கு மாத்திரம் ஜெனிவா மனித உரிமைச் சபை பரிந்துரை செய்திருக்கிறது. ஆனால் அமெரிக்க இந்திய அரசுகளுக்கிடையே நிலவும் பனிப்போர் மற்றும் சர்வதேச விவகாரங்களில் இந்திய அரசின் இரட்டைத் தன்மைப் போக்கை அவதானித்து இலங்கை சர்வதேச போர்க் குற்ற விசாரணையை நிராகரித்துப் பொறுப்புக் கூறலில் இருந்து முற்றாகவே விலகி நிற்கிறது.

இதுபோன்ற ஆபத்தான நிலைமைதான் சர்வதேச அங்கீகாரம் உள்ள பலஸ்தீன மக்களுக்கும் ஏற்படும் என்பது பட்டவர்த்தனம்.

அதாவது விடுதலைப் புலிகளை அழித்த பின்னரே தீர்வு என்று வாக்குறுதி வழங்கப்பட்டு இதுவரையும் எந்த ஒரு தீர்வும் இல்லாமல் ஈழத்தமிழர் தொடர்ந்து இனஅழிப்புக்கு உள்ளாவது போன்று, ஹமாஸ் இயக்கம் அழிக்கப்பட்டால் பலஸ்தீன மக்களும் தொடர்ந்தும் இஸ்ரேல் அரசினால் இன அழிப்புக்கு உள்ளாவர் என்பது பரகசியம்.

o

# மூடர்களின் தேசம்

பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் போராட்டங்களுக்குச் செவிசாய்க்கவும் தவறியுள்ள ஆட்சியாளர்கள், மறுபுறத்தில் குறிப்பாக தமிழ் தேசியப்பரப்பில் அத்துமீறிய குடியேற்றங்களினூடாக வரலாற்று ரீதியிலான இயல்பான இனப்பரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான பின்கதவு நடவடிக்கைகளை மிகத் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றனர்

தமது நியாயமான கோரிக்கைகளுக்காக தாயகப்பகுதிகளில் தமிழர்கள் வீதியோரங்களில் ஆயிரம் தினங்கள் என்ன வருடக்கணக்கில் போராட்டங்களை நடத்தினாலும், அதனால் பயனேதும் ஏற்படப் போவதில்லை. வீதியோரப் போராட்டங்களும், ஆர்ப்பாட்டங்களையும் ஒரு வழமையான நடவடிக்கையாக சாதாரண செயற்பாடாகக் கருதி, தமிழ் மக்களின் இருப்புக்கே ஆப்பு வைக்கும் நடவடிக்கைகளில் மறைமுக நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் அவர்கள் தீவிரமாக மூழ்கி இருக்கின்றார்கள்.

வடக்கு கிழக்கில் தமிழர்களினுடைய இனப்பரம்பலை இல்லா து ஒழிப்பதே இவர்களது நோக்கமாக உள்ளதுடன் இதையே தொல்பொருள் மரபுரிமை எனும் பேரில் சிங்கள பௌத்த பேரினவாதம் திட்டமிட்டு காய்நகர்த்தி வருகின்றது.அதற்கு தொல்லியல் துறையினரும் துணை போகின்றனர். வரலாற்றை முன்னோக்கி பார்த்தால் இலங்கையில் சிங்கள பௌத்த மதம் பின்பற்ற தொடங்கும் வேளையில் சிங்கள மொழியே இருந்திருக்கவில்லை. பௌத்தம் அறிமுகப்படுத்தப்பட்டு பல ஆண்டுகளுக்கு பின்பே சிங்கள மொழி தோற்றம் பெற்றதுடன் புத்தரை முதன்முதலில் வழிபட்டவர்களாக பௌத்த தமிழர்களே உள்ளனர்.

ஆனால் பௌத்த பேரினவாதம் இதை மாற்றி தற்போது வரலாறை திரிபு படுத்த முயல்கின்றனர். தற்போது தொல்லியல் பிரதேசங்கள் என்று வடக்கு கிழக்கில் உள்ள புனிதமான இடங்களை தொல்லியல் வரலாற்று அடையாளங்கள் எனக் கூறி பௌத்த மயமாக்களுக்கு உட்படுத்துகின்றனர்.

நிலத்தையும் அதிகாரத்தையும் தமிழ் மக்களுடன் பங்குபோட சிங்கள தேசம் ஒருபோதும் தயார் இல்லை .இந்நிலையில் பாரம்பரிய முறையிலான ஆர்ப்பாட்டங்களும், கண்டனப் பேரணிகளும் எதிர்ப்பரசியலும் அவர்களை தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான நிலைப்பாட்டிற்கு ஒருபோதும் வழிக்குக் கொண்டு வர முடியாது. இது கடந்த ஏழு தசாப்தங்களாக இடம்பெற்று வருகின்ற போராட்ட வரலாற்றின் கசப்பான பட்டறிவு அனுபவமாகும்.

காலத்துக்கு காலம் பௌத்த மாகா சங்கத்தின் ஆசியுடன் ஆட்சிப்பீட மேறும் அரசியல் தலைவர்கள் எப்போதும் பௌத்த துறவிகளின் வழிகாட்டலின் கீழ்படிந்து ஆட்சி நடத்துகின்றார்கள்.தமிழர்கள் இந்நாட்டு பிரசைகள் அவர்களும் இந்நாட்டின் பூர்வீக குடிகள் அவர்கள் நாட்டிற்குள் நியாயமான தீர்வொன்றை எதிர்பார்கிறார்கள் என்கின்ற நியாயத்தை உணராத மூடர்களாகவே கடந்த ஏழு தசாப்பத காலங்களை நகர்த்தியுள்ளனர்.தமிழர்களை அடிமைப்படுத்த வேண்டும் என்கின்ற குரோத மனப்பான்மையில் தமிழர்களின் பிரச்சனைகளை கருத்தில் கொள்ளாதவர்களாகவே வாழப்போகின்றனர். எதிர்கால தலைமு றயினருக்கும் பேரினவாத சக்திகள் நச்சு விதையை விதைத்துவிட்டே செல்வதால் எதிர்காலத்திலும் இதே இனமத வெறி கொண்ட மனநிலையில் வாழும் மூடர் கூட்டமே உருவாகப்போகின்றது.பேரினவாதம் அன்று தமிழருக்கான விட்டுக்கொடுப்பும் புரிந்துணர்வும் சகோதரத்துவத்துடனும் கைகோர்த்திருந்தால் ஆயுதப் போராட்டம் ஒன்று உருவாகவும் இலட்சங்களுக்கு மேலான உயிரிழப்புக்களும் இலங்கையில் ஏற்பட்டிருக்காது

எனவே எதிர்காலத்தில் ஐக்கிய இலங்கைக்குள் புத்தர் கூறிய போதனைகளை பின்பற்றுகின்ற பௌத்தர்களும் படித்த விட்டுக்கொடுப்புள்ள புத்திஜீவிகளைக்கொண்ட சிங்கள சமூகம் ஒன்று உருவாகினால் மாத்திரமே தமிழர்களுக்கான தீர்வு உருவாகினாலன்றி இது மூடர்களின் தேசமே.

o

## சிங்கள வனவாசிகள் யாழ் வருகை ஏன்?

**இடங்களை பார்வையிட்டுள்ளதுடன், குறித்த குழுவினருக்கான வரவேற்பு நிகழ்வு ஒன்றும் பெருமெடுப்பில் இடம்பெற்றது.**

**அண்மைக்காலமாக தமிழர் தாயகத்தில் திட்டமிட்ட நில பறிப்பு,திட்டமிட்ட பௌத்த மயமாக்கல் செயற்பாடுகள், திட்டமிட்ட கலை-கலாசார-பண்பாட்டு அழிப்புகள் அதிகரித்திருக்கும் நிலையில் ஆதிவாசிகளின் யாழ்.விஜயம் பல்வேறு சந்தேகங்களை எழுப்பியிருக்கிறது.**

**தமிழரின் தாயக பூமி வடக்கு-கிழக்கு என்பதற்கு புதிய வியாக்கியானம் கூறிவரும் ஆட்சியாளர்களும் தொல்பொருள் திணைக்களத்தினரும் பௌத்த பிக்குகளும் ,ஆதிவாசிகளை யாழுக்கு அனுப்பி அதனூடாக புதிய ஒரு நிகழ்ச்சி நிரலுக்கு தயாராவதாக சந்தேகிக்க வாய்ப்பிருக்கிறது.இன்று தமிழர் தாயகமான வடக்கு-கிழக்கில் ஆதிவாசிகள் இருப்பதற்கான எந்த அறிகுறிகளும் இல்லாத ஒரு நிலையில்,மஹியங்கனையில் வாழும்**



**மூத்த குடிகளென கருதப்படும் ஆதிவாசிகளை கொண்டு புதியதொரு ஆபத்தை தமிழர் தாயகத்தில் ஏற்படுத்துவதற்கு சிங்கள இனவாத தரப்புகள் முயல்கிறார்களோ என்ற சந்தேகமும் தமிழ் மக்களிடத்தில் ஏற்பட்டிருக்கிறது.**

**இந்த விவகாரம் தொடர்பில் அரசியல்வாதிகளும் புத்திஜீவிகளும் தமிழ் செயற்பாட்டாளர்களும் கவனம் எடுப்பது காலத்தின் தேவையாகும் என்பதை கூறிவைக்கின்றோம்.தமிழர் தேசத்தின் வரலாற்றை மாற்றத்துடிக்கும் தரப்புகளுக்கு தமிழருடைய மௌனம் உந்துசக்தியாக அமைந்துவிடக்கூடாது.**

# ஆக்கிரமிப்பாளர்களால் கிழக்கிலங்கை சுற்றிவளைப்பு

## செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் கவலை

பொத்துவில், தம்பிலுவில், திருக்கோவில் என்று அம்பாறை மாவட்டத்தின் எல்லையிலிருக்கின்ற சைவப் பாடசாலைகளுக்கெல்லாம் மூடு விழா வைக்கக்கூடிய வகையில் ஒரு மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இவ்வாறு வடக்கு- கிழக்கில் பல இடங்கள் பறிபோய்க் கொண்டிருக்கின்றன. கிழக்கிலங்கையை ஆக்கிரமிப்பாளர்கள் சுற்றி வளைத்திருக்கிறார்கள் என சிவபூமி அறக்கட்டளையின் தலைவரும், பிரபல சைவத்தமிழ்ச் சொற்பொழிவாளருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தின் வாணி விழா மேற்படி ஆச்சிரமத்தின் சிவபூமி அரங்கில் சிறப்புற இடம்பெற்ற போது அதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதேஅவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

மட்டக்களப்பில் மாடுகள் கட்டி மண் சட்டியில் தயிர் செய்து அதனையே வாழ்வாதாரமாக நம்பி வாழ்கின்ற ஏழைத்தமிழ் மக்களின் தயிர்ச் சட்டிகளையும் உடைத்தெறியும் வகையில் அவர்களின் எஞ்சியிருக்கின்ற தரவை நிலங்களைச்சிங்களவர்கள் உழுகிறார்கள். எத்தனையோ ஏக்கர்களைக் கொண்ட அந்த மேய்ச்சல் தரவை நிலங்களை மட்டக்களப்பில் மாடுகள் பெரிய செல்வமாகக் காணப்படுவதாலும், பல்லாயிரக்கணக்கான மக்களின் நாளாந்த வாழ்வாதாரமாகவும் மாடுகள் காணப்படுவதால் தான் அந்த மக்கள் இதுவரை காலமும் உழவில்லை.

இதனை உணர்ந்து மட்டக்களப்பின் எல்லைக் கிராமங்களை அப்படியே மடக்கி அந்த மக்களை இல்லாமல் செய்வதற்காக பௌத்தத் துறவிகள் வந்து குடியிருக்கத் தொடங்கி விட்டார்கள். நாங்கள் என்ன செய்யப் போகின்றோம்? என்பது தெரியவில்லை. நான் மட்டக்களப்பிற்கு அடிக்கடி போய் வருபவன் என்ற வகையில் தெரியும் வடக்கின் நிலை வேறு. கிழக்கின் நிலை வேறு.

அனுராதபுரம் விவேகானந்தா வித்தியாலயத்தில் நவராத்திரி காலப் பகுதியில் இந்தியாவிலிருந்து அறிஞர்கள் வருகை தந்து உரையாற்றியிருக்கின்றார்கள் என்ற செய்தியை நான் ஈழகேசரிப் பத்திரிகை மூலமாக வாசித்து அறிந்து கொண்டேன். குறிப்பாக 1965 ஆம் ஆண்டில் அந்தப் பாடசாலையில் நவராத்திரி விழா மிகவும் கோலாகலமாக இடம்பெற்றது.

அனுராதபுரம் விவேகானந்தா வித்தியாலயத்தைத் தற்போது முஸ்லிம் பாடசாலையாக மாற்றுவதற்குத் தினமும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்னொரு புறம் இந்தப் பாடசாலையைப் பௌத்தப் பாடசாலையாக மாற்றுவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. கட்டுவனைச்சேர்ந்த ஒருவர் தான் கதிரேசன் கோயிலின் பூசகராக இருக்கின்றார். அவர் என்னிடம் தேடி வந்து சொத்துப் பறிபோகப் போகின்றதென வேதனையுடன் தெரிவித்தார். தற்போது அனுராதபுரத்தில் பிரதான வீதியில் பெரிய நிலத்துடன் விளங்கும் பாடசாலையாக விவேகானந்தப் பாடசாலை விளங்குகிறது.


அனுராதபுரம் விவேகானந்தா வித்தியாலயப் பாடசாலையின் நிலத்தை எப்படியாவது கையகப்படுத்திவிட வேண்டுமென்பதில் ஆர்வமாகவிருக்கிறார்கள். முன்னரும் ஒருதடவை இப்பாடசாலையின் நிலத்தை ஆக்கிரமிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போது அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவராக விளங்கிய கந்தையா நீலகண்டன் அப்போதைய ஜனாதிபதியாகவிருந்த சந்திரிக்கா அம்மையாரிடம் எந்தக் காரணம் கொண்டும் குறித்த பாடசாலையை வேற்றுச் சமயப் பாடசாலையாக மாற்றக் கூடாதென வேண்டுகோள் விடுத்தார். இந்நிலையில் தற்போது அனுராதபுரம் விவேகானந்தா வித்தியாலயப் பாடசாலைக்கு முஸ்லிம் அதிபரொருவரை நியமித்திருக்கிறார்கள் என்றார்.

# முல்லைத்தீவில் கொடூரம்

# கொன்று புதைக்கப்பட்ட மனைவி

## கொழும்பில் கணவன் கைது









முல்லைத்தீவு - நீராவிப்பிட்டியில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் 22 வயதுடைய பெண்ணொருவரின் சடலம் முள்ளியவளை பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரான பெண்ணின் கணவர் கொழும்பு - வெல்லம்பிட்டி பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். முல்லைத்தீவில் இருந்து கொழும்பிற்கு வருகைத் தந்த பொலிஸார் சந்தேகநபரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபருக்கு 23 வயது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் கடந்த சனிக்கிழமை (அக். 21) இரவு தனது மனைவியைக் கொலை செய்த பின்னர், அவரது சடலத்தை வீட்டு முற்றத்தில் புதைத்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்தது.

இந்நிலையில், முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் சடலம் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது.

சட்டவைத்திய அதிகாரி வாசுதேவ, தடயவியல் பொலிஸார், விஷேட அதிரடி படையினர், பொலிஸார் ஆகியோர் முன்னிலையில் குறித்த அகழ்வு பணி மேற்கொள்ளப்பட்டிருந்தது.

நீராவிப்பிட்டி கிழக்கு பகுதியில் அண்மைய சில நாட்களாக வாடகைக்கு வீடு ஒன்றை பெற்று தங்கி வந்த இளம் குடும்ப பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டு வீட்டின் பின்பாக குழி தோண்டி புதைக்கப்பட்டுள்ளார்.

குறித்த இளம் குடும்ப பெண் தொலைபேசியில் தனது தாயாரிடம் நாளாந்தம் உரையாடுவதாகவும் கடந்த 21 திகதிக்கு பின்னர் அவரின் தொலைபேசி துண்டிக்கப்பட்ட நிலையில் இருந்துள்ளது.

இதனையடுத்து நேற்று முன்தினம் (23ஆம் திகதி) மகள் வசிக்கும் வீட்டிற்கு சென்று பார்த்த போது வீட்டில் யாரும் இல்லாத நிலையில், வீட்டின் பின்புறம் புதிதாக மண்ணால் நிரப்பப்பட்ட குழி ஒன்று காணப்படுவதைதாய் அவதானித்துள்ளார்.

இதனால் சந்தேகம் அடைந்த குறித்த பெண்ணின் தாய் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளார்.

இந்நிலையில், சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# திருமுறிகண்டி பிள்ளையார் ஆலய வழக்கு தள்ளுபடி

## அபிவிருத்திகளை துரிதப்படுத்த நடவடிக்கை

12 வருடமாக இடம்பெற்ற திருமுறிகண்டி பிள்ளையார் ஆலய உரிமை தொடர்பான வழக்கு உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

திருமுறிகண்டி பிள்ளையார் ஆலயம் 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுற்றதும் பராமரிப்புக்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

தற்போது இந்த ஆலயம் இந்துப் பண்பாட்டு நிதியத்தின் மேற்பார்வையில் இயங்கி வருகின்றது.

கோவில் வருமானத்தில் ஒரு பகுதி வன்னிப்பிராந்தியத்தில் இந்து சமய வளர்ச்சிக்காக இந்துப் பண்பாட்டு நிதியத்தின் மூலம் செலவிடப்படுகிறது.

திருமுறிகண்டிப் பிள்ளையார் கோவிலின் பரம்பரை அறங்காவலர் என்று கூறிக்கொள்ளும் ஒருவரால்,



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நிர்வகித்து வரும் இவ் ஆலயத்தினை தன்னிடம் மீள ஒப்படைக்குமாறு நீதிமன்றத்திற்கு உத்தரவிடக் கோரி 2011 ஆம் ஆண்டு அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்தார்.

நீண்ட காலமாக இடம்பெற்ற இவ் வழக்கு நேற்றையதினம் மூவர் அடங்கிய உயர்நீதிமன்ற நீதிபதிகளால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. குறித்த ஆலயம் அமைந்துள்ள ஆலய காணி அரச காணி என்பதால் தனி நபர் ஒருவர் ஆலயத்திற்கு உரிமை கொண்டாட முடியாது.

நீண்ட காலமாக இவ் வழக்கு இடம் பெற்று வந்ததால் குறித்த பிரதேசத்தில் அடிப்படை சுகாதார வசதிகள், உட்கட்டுமானப் பணிகள் மற்றும் பிரதேசத்தை அழகுபடுத்தும் பணிகள் மேற்கொள்வதற்கு தடை ஏற்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க உமாமகேஸ்வரன்,

ஆலய உரிமை தொடர்பான வழக்கு உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதால் இப்பகுதியை துரிதமாக அபிவிருத்தி செய்யும் பல்வேறு திட்டங்களை செற்படுத்தவுள்ளதாக தெரிவித்தார்.

## சம்பந்தன் ஐயா வீட்டுக்கு போங்களேன்!

இலங்கை தமிழரசு கட்சியின் சிரேஷ்ட தலைவரும், திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் அவருடைய முதுமையினால் செயற்பாட்டு அரசியலில் பங்களிப்பு செய்யமுடியாதிருப்பதன் காரணமாக அவர் தனது பதவியை துறக்க வேண்டுமென அந்த கட்சியின் பேச்சாளரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் பகிரங்கமாக கோரியுள்ளார்.

தனியார் தொலைக்காட்சியொன்றில் கலந்துரையாடல் நிகழ்வில் பங்கேற்றபோதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

288 நாடாளுமன்ற நாட்களில் வெறுமனே 39 நாட்களில் தான் நாடாளுமன்றத்துக்கு இரா.சம்பந்தன் வருகை தந்திருக்கின்றார் என்பது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக பெறப்பட்டுள்ளதகவல்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில், அவருடைய வருகை வீதம் 13.6 சதவீதமாக உள்ளது. அவ்வாறான நிலையில் அவருக்கு நாடாளுமன்ற சம்பளமாக 4 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

எரிபொருள், தொலைபேசி மற்றும் போக்குவரத்து உள்ளிட்டவற்றுக்காக 4 இலட்சத்து 19ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

சம்பந்தனின் முதுமை காரணமாக அவர் தொடர்ச்சியாக நாடாளுமன்றத்துக்கு வருகை தரமுடியாதிருக்கின்றமை தொடர்பில் நாங்கள் கரிசனைகளைக் கொண்டிருக்கின்றோம்.

விசேடமாக நான் அந்த விடயத்தில் கரிசனைகளைக் கொண்டிருக்கின்றேன். அந்தவகையில் நான் ஒருவிடயத்தினை இந்தச் சந்தர்ப்பத்தில் பகிரங்கமாக தெரிவிக்க விரும்புகின்றேன்.

சில ஆண்டுகளுக்கு முன்னதாக அவரால்



நாடாளுமன்றத்துக்கு சமூகமளிக்க முடியாத நிலைமைகள் ஏற்பட ஆரம்பித்த சந்தர்ப்பத்தில் நான் சம்பந்தனிடத்திலேயே நேரடியாக பதவி விலகுமாறு கோரினேன். அதன்போது சம்பந்தன் அதனை நிராகரித்திருந்தார். அத்துடன், அவர் அதற்கான காரணத்தினையும் தெளிவுபடுத்தினார். 2020 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின்போது திருகோணமலை மக்கள் தன்னை அந்த மாவட்டத்தின் முதலாம் நபராக தெரிவு செய்திருக்கின்றார்கள். அவர்கள் தனது உடல்நிலைமைகளை அறிந்தே தெரிவு செய்திருக்கின்றார்கள் என்று குறிப்பிட்டார். அதனை சம்பந்தன் மீண்டும் நினைவு படுத்தினார்.

எனினும், திருகோணமலை மக்களை பிரதிநிதித்துவம் செய்து செயற்படத்தப்பட வேண்டிய பல விடயங்கள் உள்ளன. பிறிதொரு பிரதிநிதியை நாங்கள் நியமித்தாலும் அவர் முழுமையான செயற்பாடுகளை ஆற்றுவாரா என்பது பற்றிய பல கரிசனைகள் உள்ளன.

எவ்வாறாயினும், சம்பந்தன் தனது முதுமை நிலைமை காரணமாக அவரால் செயற்பாட்டு ரீதியான விடயங்களை முன்னெடுக்க முடியாதுள்ளது. ஆகவே, அவர் பதவியைத் துறக்க வேண்டும் என்பது தான் எனது தனிப்பட்ட கருத்தாகவுள்ளது. அடுத்துவரும் காலத்தில் அது தொடர்பான சில நடவடிக்கைகளை எடுப்போம் என தெரிவித்துள்ளார்.

# இராணுவத்தை தக்கவைக்க முயற்சியா பொலிஸாரின் அசமந்தம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகம் மிக மோசமாக உள்ளதாக சுட்டிக்காட்டிய பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் சிவில் நிர்வாகத்தை மத்தியால் நடாத்த முடியாவிட்டால் அதனை மாகாணத்திற்கு வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் இணைத் தலைவர்களான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஆளுநர் திருமதி சாள்ஸ் ஆகியோர் தலைமையில் ஒருங்கிணைப்பு கூட்டம் நடைபெற்றது.

இதன் போது சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பான விடயம் குறித்து ஆராயப்பட்ட போதே சிறிதரன் இவ்வாறு தெரிவித்திருந்தார். இதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது.

யாழ்ப்பாணத்தை பொறுத்த வரை



யில் சிவில் நிர்வாகம் சரியான முறையில் செயற்படுத்தபடாத நிலைமை உள்ளது. இங்கு தொடர்ச்சியாக பல்வேறு சட்டவிரோத செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகிறது.

இதனைத் தடுக்க பொலிஸாரால் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாத நிலை உள்ளது. இதனால் நாளாந்தம் பல்வேறு சம்பவங்கள் நடைபெறுகிறது. ஆகவே இதனைத் தடுத்து நிறுத்துவதுடன் எதிர்காலத்திலும் நடக்காவாறு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது அவசியம்.

ஆகவே சட்டவிரோத செயற்பாடுகளை பொலிஸாரினால் கட்டுப்படுத்தி சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த முடியாதவிடத்து அந்த அதிகாரத்தை மாகாணத்திற்கு வழங்க வேண்டும்.

அத்தோடு இங்கு எந்த பிரச்சனையை எடுத்தாலும் பொலிஸாரால் முடியாது இராணுவம் தான் வேண்டும் என்று கோர முடியாது. இராணுவத்தை தொடர்ந்தும் நிலை நிறுத்தவா இவ்வாறு அவர்களை அழைக்க முயல்கின்றீர்கள் எனவும் கேட்டார்.

மேலும் சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடு தேவையற்றது. எனவே சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த பொலிஸார் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும். அதனை ஒழுங்காக செய்ய முடியாவிட்டால் அதிகாரத்தை எங்களிடம் தாருங்கள் என்றார்.

## நோர்வே நாட்டில் விமானியாக சாதனை புரிந்த ஈழத்துப் பெண்!



யாழ். குருநகரில் இருந்து புலம்பெயர்ந்து நோர்வே சென்ற ஈழத்துப் பெண்ணான ஷெர்லி செபஸ்தியாம்பிள்ளை அந்நாட்டின் தமிழ் பெண் விமானியாக பட்டம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இவர் விமானத்தைப் பழுது பார்க்கும் படிப்பை நோர்வேயில் நிறைவுசெய்து 12 ஆண்டுகள் விமானங்களை பழுதுபார்ப்பவராக பணிபுரிந்துள்ளார்.

பின் மீண்டும் நோர்வேயில் கல்வியை தொடர்ந்து விமானத்தை ஓட்டும் பரீட்சையில் சித்தியடைந்து விமானியாக பட்டம் பெற்றுள்ளார்.

தனது தந்தையின் 50 வருட கனவிற்காக பல கஷ்டங்கள், சிரமங்கள், தடைகளையும் தாண்டி சாதித்து காட்டியுள்ளார்.

## விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணிகள்



விசுவமடு தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டது.

இவ் சிரமதான பணியில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் அவர்களும் கலந்துகொண்டு சிரமதான பணியில் ஈடுபட்டார்.

இதன் போதும் மாவீரர் நாள் தொடர்பாக ஊடகங்களுக்கு அவர் கருத்துக்கள் தெரிவித்தார் எதிர்வரும் நவம்பர்27 ம் திகதி மாவீரர் நாள் நிகழ்வுகளை அனுஸ்ரிக்கும் முகமாக இந்த சிரமதான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இடம்பெற்று வருகிறது.

## வீரபுரம் கிராம மக்களுக்கு நீதியை வழங்க வேண்டும்

### சாள்ஸ் எம்.பி. வேண்டுகோள்

வீரபுரம் கிராம மக்களுக்கென ஒதுக்கப்பட்ட காணிகளை அம்மக்களுக்கே வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

குறித்த பகுதிக்கு விஜயமொன்றினை மேற்கொண்டு மக்களுடன் கலந்துரையாடியதுடன், அங்கு கருத்து தெரிவித்த அவர்,

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட வீரபுரம் கிராம மக்களுக்கு 1994 ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் காணிகள் ஒதுக்கப்பட்டன. ஆனால், யுத்த காலகட்டத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வின் காரணமாக குறித்த காணிகளை மக்கள் பயன்படுத்த முடியாத



நிலைமை காணப்பட்டது. குறித்த காணிகளில் வீரபுரம் கிராம மக்கள் மீள் குடியேற பல்வேறு தடைகள் ஏற்படுத்தப்பட்டு வந்தன.

சம்பவம் தொடர்பில் வீரபுரம் கிராம மக்கள் எனது கவனத்திற்கு கொண்டுவந்தனர். நீண்டகால முயற்சிக்கு பின் நேற்றையதினம் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர், வெங்கல செட்டிகுளம் பிரதேச செயலாளர், கிராம அலுவலர் மற்றும் பொது அமைப்பின் பிரதிநிதிகள் என பலரும் குறித்த பகுதிக்கு விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தோம்.

நேரடியாக கள நிலைமைகளை ஆராய்ந்ததன் பின்னர் வீரபுரம் கிராம மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவென அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட காணிகளை மீண்டும் அம்மக்களுக்கு வழங்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்க அதிபரினால் உறுதியளிக்கப்பட்டது எனவும் தெரிவித்தார்.

## இலங்கையில் சீதைக்கு கோவில்

### இந்திய தேர்தலில் வாக்குறுதி

ஆட்சிக்கு வந்தால் இலங்கையில் சீதைக்கு கோவில் கட்டுவோம் என மத்தியபிரதேச சட்டசபை தேர்தலில் காங்கிரஸ் கட்சி வாக்குறுதி அளித்துள்ளது.

இந்த ஆண்டு இறுதிக்குள் 5 மாநிலங்களில் சட்டசபை தேர்தல் நடக்கவுள்ளது. மத்திய பிரதேசத்தில் அடுத்த மாதம் (நவம்பர்) 17-ம் திகதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளநிலையில் தேர்தல் களம் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது.

இந்தநிலையில் காங்கிரசின் முதலமைச்சர் வேட்பாளர்கமல்நாத் பிரசாரத்தை எக்ஸ் தளம் வாயிலாக தொடங்கியுள்ளார்.

காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் கிடப்பில் உள்ள இலங்கையில் சீதை கோவில் கட்டும் திட்டம் தொடங்கப்படும், மேலும் கோவில் அர்ச்சகர்களின் உதவித்தொகை உயர்வு, கோவில் ஆக்கிரமிப்பு நிலங்கள் மீட்பு, கோவில் சொத்துகள் பராமரிப்பு' ஆகியவை மேற்கொள்ளப்படும் என்றார்.

## வெளிநாடு செல்ல கோடிக்கணக்கான பணத்தை கொடுத்து ஏமாந்த இளைஞர்கள்

### சாணக்கியனின் அலுவலகத்துக்கு படையெடுப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த 100க்கும் மேற்பட்ட பொதுமக்கள் வெளிநாடு மோகத்தினால் பணத்தை இழந்துள்ளதாக தெரிவித்து நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனிடம் முறைப்பாடு அளித்துள்ளனர்.

இவர்கள் சுமார் 8 கோடி ரூபாவினை போலி முகவர்களை நம்பி இழந்துள்ளதாகவும், தற்போது நிர்க்கதிக்குள்ளான தமக்கு தீர்வினை பெற்றுத்தருமாறும் இதன் போது கேட்டுக்கொண்டுள்ளனர்.

குறித்த சம்பவம் மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடி பகுதியில் திங்கட்கிழமை (23.10.2023) மாலை நாடாளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர், வெளிநாட்டில் வேலைவாய்ப்பு என கூறி 185 பேரிடம் 8 கோடிகளுக்கு அதிகமாக மோசடி அரச உத்தியோகத்தில் உள்ள சிலரால் மேற் கொள்ளப் பட்டுள்ளது. இதற்கு உடந்தையாக பாடசாலை மாணவன் ஒருவரும் உள்ளடங்குவதாக அறிகின்றேன்.

தற்போது இவ்விடயம் தொடர்பில் 3 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு பொலிஸாரினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இவ்விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகளை தொடர்பு கொண்டு கலந்துரையாடினேன். பாதிக்கப்பட்ட மக்கள் என்னை இதற்கான உரிய நீதியினை பெற்றுத் தரும்படி எனது அலுவலகத்தில் சந்தித்திருந்தார்கள். தற்பொழுது இவ்வாறான மோசடிகள் அதிகளவாக இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இவ்வாறான ஏமாற்றுக்காரர்கள் இடம் இருந்து மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும் என இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

## பலாலி விமான நிலையத்தில் ஏற்படவுள்ள மாற்றம்

பலாலி சர்வதேச விமான நிலையத்தில் தற்போதுள்ள பயணிகள் முனையத்தை விரிவுபடுத்துதல், டியூட்டி பிரியை ஸ்தாபித்தல், சுகாதார வசதிகளை அதிகரித்தல், குடிவரவு மற்றும் சுங்க அதிகாரிகளுக்கான வசதிகள் மற்றும் உள்கட்டமைப்புகளை அதிகரித்தல் உள்ளிட்ட பயணிகள் வசதிகள் விரிவுபடுத்தப்படும் எனதுறைமுகங்கள், கப்பல் மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் விமான சேவைகள் அதிகரிப்பதன் காரணமாக பலாலி விமான நிலையத்திற்கு வரும் மற்றும் புறப்படும் பயணிகளுக்கான வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். இதற்காக 200 மில்லியன் ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. சென்னையில் இருந்து பலாலிக்கு தினமும் விமானசேவைகள் இடம்பெறுவதுடன், 60 பயணிகள் பயணிக்கும் வகையிலான விமானங்களே பலாலிக்கு இயக்கப்படுகின்றன.



மணிப்பூர் பிரச்சினையின் பின்னணி

# மோடியை இந்து தேசியவாதியாக்க முயற்சியா?

‘மணிப்பூர்’ பிரதமர் நரேந்திரமோடி ஒரு இந்து தேசியவாதி என்பதை பாரத தேசத்திற்கு காட்டுவதற்காக ஒரு கதையை வடிவமைக்க முயன்ற குழு மணிப்பூர்கிறிஸ்தவர்களைகுறிவைத்திருக்கின்றது.

இந்தியாவில் மத சார்பு அடிப்படையில் பிரிவினைகளைத் தூண்டி பிரதமர் மோடிக்கு எதிரான தமது பகை உணர்வை பழிதீர்க்கும் முன்னேற்பாடாக மணிப்பூரில் இடம்பெற்று வருகின்ற கலவரத்தின் பின்னணியை நோக்க முடியும்.

மணிப்பூர், வடகிழக்கு இந்தியாவில் ஒரு மாநிலம், இம்பால் நகரம் இதன் தலைநகரம். இது இந்திய மாநிலங்களான வடக்கே நாகாலாந்து மற்றும் தெற்கே வானம் அஸ்ஸாவோ இது மியான்மாரின் இரண்டு பகுதிகளையும் எல்லையாகக் கொண்டுள்ளது.

கிழக்கில் சகாயிங் பகுதி மற்றும் தெற்கே சின் மாநிலம் 22,327 கிலோ மீற்றர் (8,621 ச.மை) பரப்பளவைக் கொண்டுள்ளது. அதிகாரப்பூர்வமான மற்றும் மிகவும் பரவலாகப் பேசப்படும் மொழி Meitei மொழி (அதிகாரப்பூர்வமாக மணிப்பூரி மொழி என அழைக்கப்படுகிறது)

இவ்வருடம் 2023 மணிப்பூர் வன்முறைகள் இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில், இம்பால் பள்ளத்தாக்கில் வாழும் பெரும்பான்மையினரான மெய்தி மக்களுக்கும், சுற்றியுள்ள மலைப்பகுதிகளில் வாழும் குக்கி பழங்குடி மக்களுக்கும் இடையில் வெடித்த வன்முறை ஆகும். இந்த மோதலில் 142 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

அஞ்சு அபிராம்

இந்த வன்முறையின் பிரதான காரணம் இந்தியாவின் வளர்ச்சியை விரும்பாதவர்கள் மதக்குரோதங்களை விதைத்து பிரதமர் மோடியின் ஆட்சியை குழப்புவதே பிரதான காரணமாக கூறப்படுகிறது.

லடாக்கின் ஒரு பகுதியை சீனா ஆக்கிரமித்துள்ளது, ஏறக்குறைய கேரளாவின் அளவு மற்றும் அருணாச்சல பிரதேசத்தை விரும்புகிறது. காஷ்மீரை இலக்காகக் கொண்ட பயங்கரவாதத்தை பாகிஸ்தான் தொடர்ந்து ஆதரிக்கிறது,

ஆனால் காஷ்மீர் 370 வது பிரிவை ரத்து



செய்ததன் காரணமாக பொருளாதார மற்றும் அரசியல் மறுமலர்ச்சியை அனுபவிக்கிறது, பாகிஸ்தானின் இன்டர்-சர்வீசஸ் உளவுத்துறை (ஐஎஸ்ஐ) நிறுவனம் பஞ்சாபை சீர்குலைப்பதில் அதிக கவனம் செலுத்துகிறது.

எல்லா எதிரிகளும் இராணுவ வழிகளைப் பயன்படுத்துவதில்லை. இந்தியா உலகின் மிகப்பெரிய ஜனநாயகம் மட்டுமல்ல, மொழியியல், மதம் மற்றும் இனரீதியாக உலகின் மிகவும் மாறுபட்ட மாநிலங்களில் ஒன்றாக இருப்பதால், நாட்டின் எதிர்ப்பாளர்கள் சொ



ரி-தேர்ந்தெடுக்கப்பட்ட உண்மைகள் மற்றும் தவறான கதைகளால் சுரண்டுவதற்கு உள்நாட்டு தவறுகளுக்கு பஞ்சமில்லை.

தொலைக்காட்சி கேமராக்கள் பொய் சொல்லாது, ஆனால் அவை பரந்த கண்ணோட்டத்தையும் தருவதில்லை.

மணிப்பூரில் நடந்த வன்முறையை எடுத்துக் கொள்ளுங்கள். இந்தியாவிற்கு வெளியே, மணிப்பூருக்கு ஒருபோதும் சென்றிராத பத்திரிகையாளர்கள் வன்முறையின் சுருக்கமான களியாட்டத்தை ஒரு குறுங்குழுவாத கண்ணி மூலம் விவரித்தனர்.

நிர்வாணமாக ஒரு பெண்ணை கலவரக்காரர்கள் அழைத்துச் சென்று சித்திரவதை செய்வதை ஒளிப்படம் எடுத்து தொலைக்காட்சிகள் சமூக வலைத்தளங்களில் பிரபல்யபடுத்தினார்கள்.

இந்து தேசியவாதிகள், மதத்தின் காரணமாக அப்பாவி கிறிஸ்தவர்களை துன்புறுத்துவதாக பிரச்சாரம் செய்யப்பட்டது. அத்தகைய விவரிப்பு எவ்வளவு அப்பாவித்தனமாக இருந்தது.

அமைதியை வெல்வதற்குப் பதிலாக, இது அடிக்கடி மோதலை உருவாக்குகிறது. இது ஒரு தார்மீக ஆபத்து. நிச்சயமாக, 1956 ஆம் ஆண்டிலிருந்து நாகா மற்றும் குக்கி குலங்களை அரசாங்கம் ‘பட்டியலிடப்பட்ட பழங்குடியினர்’ என்று பட்டியலிட்ட பல மணிப்பூர் கிறிஸ்தவர்களின் நிலை இதுவாகும்.

இனப்பதற்றம், சில இரண்டாம் நிலை பிரிவு பரிமாணங்கள், பிராந்தியத்தில் ஒன்றும் புதிதல்ல. உதாரணமாக, 4 டிசம்பர் 1979 அன்று, நியூயார்க் டைம்ஸ், வங்காளிகளின் வருகையால் இந்தியாவின் கிறிஸ்தவ பழங்குடியினர் கோபமடைந்துள்ளனர் என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை வெளியிட்டது. அன்றும் இன்றும் அமெரிக்க எதிர்வி

**“இந்து தேசியவாதிகள், மதத்தின் காரணமாக அப்பாவி கிறிஸ்தவர்களை துன்புறுத்துவதாக பிரச்சாரம் செய்யப்பட்டது. அத்தகைய விவரிப்பு எவ்வளவு அப்பாவித்தனமாக இருந்தது. அமைதியை வெல்வதற்குப் பதிலாக, இது அடிக்கடி மோதலை உருவாக்குகிறது. இது ஒரு தார்மீக ஆபத்து. நிச்சயமாக, 1956 ஆம் ஆண்டிலிருந்து நாகா மற்றும் குக்கி குலங்களை அரசாங்கம் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் என்று பட்டியலிட்ட பல மணிப்பூர் கிறிஸ்தவர்களின் நிலை இதுவாகும்.”**

னையில் உள்ள வேறுபாடு, பிரதமர் சரண் சிங் மதச்சார்பற்றவராகவும், பிரதமர் நரேந்திர மோடி மதச்சார்பற்றவராகவும் இருப்பதிலேயே அதிகம் தொடர்புடையதாக இருக்கலாம். எவ்வாறாயினும், அமெரிக்கர்கள் எங்கள் சார்புகளை எப்போதும் அறிந்திருக்க மாட்டார்கள். பொருட்படுத்தாமல், மணிப்பூர் பொதுவாக அமைதியாகவும் அமைதியாகவும் இருக்கும் போது, சட்டவிரோத குடியேற்றம் மற்றும் போதைப்பொருள் கடத்தல் ஆகியவை அவ்வப்போது பிராந்திய அமைதியைக் குறைக்கின்றன.

கடந்த கோடையில் இதுதான் நிலைமை. பெரும்பாலான குடியிருப்பாளர்களை சட்டத்தின் கீழ் சமமாக ஆக்குவதற்கான சீர்திருத்த நடவடிக்கைகளை அரசாங்கம் அறிமுகப்படுத்திய பிறகு, குக்கிகள் தாங்களாகவே அனுபவித்து வந்த அதே உரிமைகளை பெரும்பாலும் இந்து மைதேயி குழுவிற்கு வழங்குவது என்று அஞ்சி, பெருமளவில் கிறிஸ்தவ குக்கி பழங்குடியினருக்குள் உள்ள சில ஆர்வலர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வீதிகளில் இறங்கினர்.

அதைவிட ஓபியம் ஒழிப்பு முயற்சிகள் ஆப்கானிஸ்தானில் ‘இஸ்லாமிய வெறுப்பாக’ இருந்தன. இவை எதுவும் அடுத்தடுத்த வன்முறைகளை நியாயப்படுத்தவில்லை.

சில குக்கியும் மெய்டேயும் ஒருவருக்கொருவர் வீடுகளையும் வணிகங்களையும் எரித்தனர். குக்கிகள் மசூதிகளை எரித்தனர், அதே நேரத்தில் மெய்டே கலகக்காரர்கள் தேவாலயங்களை குறிவைத்தனர்.

சில குக்கிப் பெண்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட துஷ்பிரயோகம் மன்னிக்க முடியாதது. குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்த வழக்கறிஞர்கள் முயல்வதால், இந்திய உச்ச நீதிமன்றம் அதன் விளைவாக வரும் கிரிமினல்



வழக்கை கண்காணிப்பது சரியானது. குற்றங்கள் மன்னிக்க முடியாதவை.

என்றாலும், அவை நிகழ்ந்த சூழலையும் புரிந்துகொள்வது முக்கியம் (மன்னிக்கவில்லை என்றாலும்) பெரும்பாலும் கிறிஸ்துவ இனக்குழு? பிரச்சனை மதம் அல்ல என்பதை இது காட்டுகிறது.

தொழில்முறை ஆர்வலர்கள், சிலரின் நிதி ஒளிபுகா அல்லது அநாமதேய “Gof-undme“ நன்கொடைகள் மூலம் பணம் திரட்டுவது பெரும்பாலும் ஒரு நாடு அல்லது அதன் முகவர்களிடமிருந்து நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வருவது போல் தெரிகிறது. கலிபோர்னியாவை தளமாகக் கொண்ட கேட்ஃபிளை ஆர்வலரான பீட்டர் ஃபிரெட்ரிச், அமெரிக்காவில் உள்ள இந்து அரசியல்வாதிகள் கிரிஸ்துவர் எதிர்ப்பு அடக்குமுறையைக் கண்டிக்கக் கோரி அடிக்கடி தனது சுருக்கமான சுய-அறிவிப்பு ஆனால் ஒருபோதும் உறுதிப்படுத்தாத உண்ணாவிரதப் போராட்டங்களில் ஒன்றைத் தொடங்கினார்.

மிகுதி 15 ஆம் பக்கத்தில்...




# தங்கம் கடத்திய அலி சப்ரி ரஹீம் சிக்கியது எப்படி?

தங்கத்தை நாட்டுக்குள் கடத்திவர முயற்சித்த நிலையில் கைது செய்யப்பட்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் தொடர்பான செய்திகள் கடந்தக் காலங்களில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தன.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வரப்பிரசாதங்களை தவறாகப் பயன்படுத்தியே அலி சப்ரி ரஹீம் நாட்டுக்குள் தங்கத்தைக் கடத்திவர முயற்சித்ததாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி எம்.பிக்கள் அலி சப்ரி ரஹீமுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாராளுமன்றத்தில் தொடர்ந்து கூறிவருகிற நிலையில், எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவால் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டப் பிரேரணைக்கு அமைய பாராளுமன்ற குழுக்கள் அனைத்திலிருந்தும் அலி சப்ரி ரஹீம் நீக்கப்பட்டிருக்கிறார்.

ஆனால், தங்கக் கடத்தல் குற்றச்சாட்டுக்களை தொடர்ந்து மறுத்துவரும் அலி சப்ரி ரஹீம் ஊடகங்களுக்குப் பொய் கூறி வருகிறார் என்பது தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் எமக்குக் கிடைத்த ஆவணங்கள் உறுதி செய்கின்றன.

அது மட்டுமல்லாது நாட்டுக்குள் தங்கத்தை எப்படி கடத்தி வந்தார்? இந்த தங்கக் கடத்தலுக்கு அலி சப்ரி ரஹீம் பயன்படுத்திய உத்திகள் என்ன என்பதுத் தொடர்பிலும் பல பிரத்தியேகமான தகவல்களை அந்த ஆவணம் வெளிப்படுத்துகிறது.

என்னோடு வந்தவர்தான் இந்த வேலையை செய்தது. நான் தங்கத்தை கடத்தி வரவில்லை. எனது கையிலிருந்து தங்கம் பிடிப்படவில்லை. என்னோடு வந்தவரிடமிருந்தே தங்கத்தை எடுத்தார்கள். நான் செய்யாத தவறுக்காக அபராதத் தொகையை செலுத்தியிருக்கிறேன். இப்படியான கருத்துக்களை தொடர்ந்து கூறி, தங்கக் கடத்தலில் தான் ஈடுபடவே இல்லை என்பதை அலி சப்ரி ரஹீம் கூறி வருகிறார்.

பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் உள்ள அதிமுக்கியஸ்தர்களுக்கான முனையத்தின் ஊடாக, சட்டவிரோதமாக தங்கம் மற்றும் கையடக்க தொலைபேசிகளை நாட்டுக்குள் எடுத்துவர முயற்சித்தமை தொடர்பாக விரிவான அறிக்கை ஒன்றை வழங்குமாறு பாராளுமன்ற செயலாளர் நாயகத்தால், இலங்கை சுங்கப்பிரிவின் பணிப்பாளர் நாயகம் பி.பி.எஸ்.சீ.நோனிஸ்க்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. பாராளுமன்ற செயலாளர் நாயக்கத்தின் கடிதம் LS/TO/53 என இலக்கமிடப்பட்டிருக்கிறது.

இக்கடிதத்தில், பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் எவ்வாறு தங்கத்தை கடத்திவர முயற்சித்தார் என்பது தொடர்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாது, அலி சப்ரி ரஹீம் ஊடகங்களுக்கு தொடர்ந்து பொய் கூறி வருவதையும் இக்கடிதம் ஊடாக நிரூபிக்க முடிகிறது. தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் இக்கடிதத்தை பாராளுமன்ற செயலாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக்கொள்ள முடிந்தது.

## நீண்ட காலமாக கண்காணிக்கப்பட்ட அலி சப்ரி ரஹீம்

கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றுக்கு அமைவாக கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக அலி சப்ரி ரஹீமால் மேற்கொள்ளப்படும் விமானப் பயணங்கள் நீண்டக் காலமாகவே கண்காணிக்கப்பட்டு வந்திருக்கின்றன.




**“பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வரப்பிரசாதத்தைப் பயன்படுத்தி, சுங்கக் கட்டளைச் சட்டத்தை மீறி அலி சப்ரி ரஹீம் தங்கம், தங்க நகைகள் மற்றும் ஸ்மார்ட் போன்களை நாட்டுக்குள் எடுத்துவர முயற்சித்தமை உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் சுங்கத் திணைக்களம் பாராளுமன்றத்துக்கு கடிதம் ஊடாக எழுத்துமூலம் அறிவித்திருக்கிறது.”**

2023.05.23 அன்று முற்பகல் 9.25 மணியளவில் Fly Dubai விமான சேவைக்கு சொந்தமான FZ547 விமானத்திலிருந்து அலி சப்ரி ரஹீமும் அவரது உதவியாளரான ஏ.எச்.எம்.பைரூனும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கியிருக்கிறார்கள். அலி சப்ரி ரஹீம் D5658824 என்கிற இலக்கத்தைக் கொண்ட கடவுச்சீட்டையும், பைரூன் (உதவியாளர்) N 10396987 என்கிற இலக்கத்தையும் கொண்ட கடவுச்சீட்டையும் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

வந்திறங்கியது முதலே, அலி சப்ரி ரஹீம் நடவடிக்கைகள் விமான நிலைய அதிகாரிகளால் கண்காணிக்கப்பட்டுள்ளன. விமானத்திலிருந்து இறங்கியதுமே தன்னுடைய தனிப்பட்ட பையை எடுத்துக்கொண்டு விமான நிலையத்தில் உள்ள Crystal Lounge வந்த அலி சப்ரி ரஹீம், தன்னுடைய ஏனைய பொதிகளை எடுத்துவருவதற்காக விமான நிலையத்தில் உள்ள விமானப் பயணிகளுக்கு சேவையை வழங்கும் நிறுவனத்தின் அதிகாரி ஒருவரிடம் வழங்கியிருக்கிறார்.

விமானத்திலிருந்து வந்திறங்கியப் பின்னர் விசேட பிரமுகர்களுக்கான முனையத்தில் வைத்து தான் எடுத்துவந்த பைகளை சோதனைக்கு உட்படுத்தாது வெளியில் எடுத்துச் செல்ல முயற்சித்தபோது, அங்கிருந்த சுங்க அதிகாரிகள் அதனை அவதானித்து அலி சப்ரி ரஹீமை தடுத்து வைத்து விசாரணை செய்திருக்கிறார்கள். பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் கையில் எடுத்துவந்த பையில் தங்கத்தை மறைத்துவைத்து எடுத்துவந்திருந்த அதேவேளை, விமான நிலையத்தில் உள்ள விமானப் பயணிகளுக்கு சேவையை வழங்கும் நிறுவனத்தின் அதிகாரியிடம் எடுத்து வருவதற்கு ஒப்படைத்திருந்த இரு பைகளிலும் 91 ஸ்மார்ட் போன்கள் இருப்பதையும் அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

அலி சப்ரி ரஹீமின் பயணப் பையில் மிகவும் சூட்சமமான முறையில் கவர் செய்யப்பட்ட இரு பெட்டிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 3,397.7 கிராம் தங்கத்தை சுங்க அதிகாரிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதற்கு மேலதிகமாக 91 Samsung, Xiaomi Redmi ஸ்மார்ட் போன்களும் அவரது பையிலிருந்து கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளன.





## தங்கக் கடத்தலுக்கு பயன்பட்ட எம்.பிகளுக்கான வரப்பிரசாதம்

இதற்கு மேலதிகமாக, சுங்க அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளின் ஊடாக அலி சப்ரி ரஹீம் வந்த அதே விமானத்தில் வந்த அவரது (அலி சப்ரி ரஹீமின்) உதவியாளரான ஏ.எச்.எம்.பைரூனும் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்படுகிறார். கட்டுநாயக்க விமான நிலையத்தின் Green Channel பகுதியில் வைத்தே இவர் கைது செய்யப்படுகிறார். அவரிடமிருந்து கைது செய்யப்பட்டு முன்னெடுக்கப்பட்ட தீவிர விசாரணைகளின் ஊடாக அவரிடமிருந்து மேலும், 19 ஸ்மார்ட் போன்களை அதிகாரிகள் பறிமுதல் செய்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாது, தன்னுடையது எனக் கூறி 0.828 கிராம் தங்கத்தை டுபாயிலிருந்து எடுத்து வருவதற்காக, அந்நாட்டு சுங்க அதிகாரிகளால் ஏ.எச்.எம்.பைரூனுக்கு (அலி சப்ரியின் உதவியாளருக்கு) வழங்கப்பட்டிருந்த ஆவணம் ஒன்றையும் அதிகாரிகள் கண்டுபிடிக்கிறார்கள்.

இதற்கு மேலதிகமாக, அலி சப்ரி ரஹீமால் சட்டவிரோதமாக நாட்டுக்குள் எடுத்துவர முயற்சித்த தங்கம் மற்றும் தங்க நகைகளில், தங்க நகைகள் அனைத்தும் அலி சப்ரி ரஹீமின் உதவியாளரின் பெயரில் டுபாய் சுங்கப் பிரிவிடம் பதிவு செய்யப்பட்டிருப்பதும், இவற்றை நாட்டுக்குள் எடுத்து வருவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வரப்பிரசாதத்தை அலி சப்ரி ரஹீம் தவறாகப் பயன்படுத்தினார் என பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு சுங்கத் திணைக்களம் அனுப்பியுள்ள கடிதத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக அலி சப்ரி ரஹீமிடமிருந்த கண்டுபிடிக்கப்பட்ட 2515.9 கிராம் தங்க பிஸ்கட்டுகள் கொள்வனவு செய்யப்பட்டமைக்கான எந்தவிதமான ஆவணங்களும் பாராளுமன்ற உறுப்பினரிடம் இல்லை என்பதையும் அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வரப்பிரசாதத்தைப் பயன்படுத்தி, சுங்கக் கட்டளைச் சட்டத்தை மீறி அலி சப்ரி ரஹீம் தங்கம், தங்க நகைகள் மற்றும் ஸ்மார்ட் போன்களை நாட்டுக்குள் எடுத்துவர முயற்சித்தமை உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் சுங்கத் திணைக்களம் பாராளுமன்றத்துக்கு கடிதம் ஊடாக எழுத்துமூலம் அறிவித்திருக்கிறது.

மேலும், பாராளுமன்ற உறுப்பினரால் நாட்டுக்குள் சட்டவிரோதமாக எடுத்துவர முயற்சித்த மொத்தத் தங்கத்தின் பெறுமதி 74,096,990 ரூபாய் எனவும் அவரால் கொண்டுவரப்பட்ட 91 ஸ்மார்ட் போன்களின் மொத்தப் பெறுமதி 4,288,500 ரூபாய் எனவும் சுங்க அதிகாரிகளின் விசாரணை இறுதியில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. சுங்கக் கட்டளைச் சட்டத்துக்கு அமைவாகவும் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக அலி சப்ரி ரஹீமால் சட்டவிரோதமாக எடுத்துவரப்பட்ட தங்கம் மற்றும் ஸ்மார்ட் போன்கள் அரசுடமையாக்கப்பட்டதோடு, 7.4 மில்லியனுக்கும் அதிகமான அபராதமும் அவருக்கு விதிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினரின் உதவியாளரால் நாட்டுக்குள் எடுத்துவர முயற்சித்த ஸ்மார்ட் போன்கள் மற்றும் 119,305 ரூபாய் பெறுமதி வாய்ந்த சிகரட் பெட்டிகளும் அரசுடமையாக்கப்பட்டு, ஒரு இலட்சத்துக்கும் அதிகமான அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

நன்றி: ஒருவன்





இந்திய இராணுவத்தினரால் சுட்டு படுகொலை செய்யப்பட்ட யாழ் போதனா வைத்தியசாலை பணியாளர்களின் 36 ஆவது நினைவு தினம் வைத்தியசாலையில் நினைவு கூறப்பட்ட போது...

## சுன்னாகத்தில் பாவலர்மணி கலைப்புட்பா எழுதிய அன்பகவல், விருத்தமாயிரம் நூல்கள் வெளியீடு





கனடாவில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வரும் கிளிநொச்சியைச் சேர்ந்த பாவலர்மணி கலைப்புட்பா கிறிட்டி எழுதிய அன்பகவல், விருத்தமாயிரம் நூல்களின் வெளியீட்டு விழா அண்மையில் சுன்னாகம் பொதுநூலக மண்டபத்தில் யாழிசைக் கவித் தடாகம் அமைப்பின் ஏற்பாட்டில் சிறப்பாக இடம்பெற்றது.

யாழிசைக் கவித் தடாகம் அமைப்பின் நிறுவுநரும், கவிஞருமான உடுவிலூர் கலா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் உடுவில் பிரதேச செயலர் த.முகுந்தன் பிரதம விருந்தினராகவும், கவிஞர்.யாழ்பாவணன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலய ஆசிரியர் திருமதி.பரீதா இராசவிசாகன் நூல்களின் வெளியீட்டுரையை நிகழ்த்தினார். விருத்தமாயிரம் நூலை எழுத்தாளர் கோபி கோபிகை வெளியிட்டு வைக்க யாழிசைக் கவித் தடாகம் அமைப்பின் நிறுவுநர் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார். கவிஞர். உடுவிலூர் கலா அன்பகவல் நூலின் நயப்புரையையும், கவிஞர்.வைர வசீகரன் விருத்தமாயிரம் நூலின் நயப்புரையையும் நிகழ்த்தினர். நூலாசிரியர் கலைப்புட்பா கிறிட்டி ஏற்புரையை வழங்கினார். குறித்த நிகழ்வில் எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(செல்வநாயகம் ரவிசாந்)

## உரும்பிராயில் கிராமிய உழைப்பாளர் சங்க கிளையின் 17 ஆவது ஆண்டு விழாவும் மலையக மக்களின் 200 ஆவது ஆண்டு நிகழ்வும்





கடந்த சனிக்கிழமை (21.10.2023) மாலை-06 மணிக்கு உதயபுரம் உதயசூரியன் சனசமூக நிலைய கலையரங்கில் யாழ்.மாவட்டக்கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் அனுசரணையில் நடைபெற்றது.

கிளை நிர்வாகத் தலைவி திருமதி.மதிவதனி அகிலன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் தீபன் திலீசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். நிகழ்வில் கிராமத்தில் கிராமிய உழைப்பாளர் சங்கத்துடன் இணைந்து சேவை செய்த எட்டுச் சேவையாளர்களும், பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்த கிராமத்தைச் சேர்ந்த இரண்டு மாணவிகளும், தரம்-05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற கிராமத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

இதேவேளை, நிகழ்வின் இறுதியில் 'மரணத்தில் பூத்த மலையகம்' எனும் நாடகமும், காவடியாட்டம், நடனம் உள்ளிட்ட கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. நிகழ்வில் கிராமிய உழைப்பாளர்சங்கத்தின்தலைவர் என்.இன்பம் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

(செல்வநாயகம் ரவிசாந்)



ஊடகவியலாளராக தனது பயணத்தை ஆரம்பித்து யாழ் பல்கலைக்கழக ஊடகத் துறை தலைவராக ,விரிவுரையாளராக கடமையாற்றி இன்று யாழ் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட பீடாதிபதியாக உயர்வு நிலைபெற்று பணியாற்றிவரும் பேராசிரியர் கலாநிதி சிவசுப்பிரமணியம் ரகுராம் அவர்களை முல்லைத்தீவு ஊடக அமையம் கடந்த 22 ஆம் திகதி இடம்பெற்ற முல்லைத்தீவு ஊடக அமையத்தின் 2ஆம் ஆண்டு நிறைவு விழா நாளில் மதிப்பளித்திருந்தது.

## கொக்குவில் இந்துக் கல்லூரிப் படுகொலையின் 36 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு உணர்வுபூர்வ அனுஷ்டிப்பு





இந்திய இராணுவத்தால் கொக்குவில் இந்துக் கல்லூரியில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட 50 இற்கும் மேற்பட்ட பொதுமக்களின் 36 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (24.10.2023) கொக்குவில் இந்துக் கல்லூரியின் மைதான நுழைவாயிலுக்கு முன்பாக நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப் பட்டது.

## மணிப்பூர் பிரச்சினையின் பின்னணி

சர்வதேச மத சுதந்திரத்திற்கான ஆணையம் சில வன்முறைகளை வடிவமைக்கிறது. இத்தகைய மலிவான காட்சிகளையும், துல்லியமின்மைகளையும் உள்வாங்க வேண்டிய தேவை ஜனநாயகம் கொடுக்கும் விலைதான்.

30 கோடிக்கும் அதிகமான மக்கள் வாழும் நாட்டில் 1,600 வெறுப்புக் குற்றங்களை எண்ணுவது ஒரு நாடு தன்னுடன் போரிடவில்லை, மாறாக சகிப்புத்தன்மையைக் குறிக்கிறது.

அஜர்பைஜான், பாகிஸ்தான் மற்றும் சீனா ஆகியவை இந்தியாவில் தடுக்க முற்படுகையில், ஆர்மீனியா யூரேசியாவின் பெரும்பகுதியை இந்தியா அணுகக்கூடிய முனையாக மாறுகிறது.

இந்தியப் பொறியாளர்கள், மருத்துவ மருத்துவர்கள் மற்றும் புரோகிராமர்கள் ஆர்மீனியாவுடன் இணைந்து நாட்டின் பொருளாதாரத்தை, குறிப்பாக தொழில்நுட்பம், மருத்துவத்துறை மற்றும் பல்கலைக்கழகத் துறைகளில் குதிக்கத் தொடங்குகின்றனர். மணிப்பூர் பொதுவாக அமைதியாக இருக்கும் போது, சட்டவிரோத குடியேற்றம் மற்றும் போதைப்பொருள் கடத்தல் ஆகியவை அவ்வப்போது பிராந்திய அமைதியைக் குறைக்கின்றன.

கடந்த கோடையில் இதுதான் நிலைமை. பெரும்பாலான குடியிருப்பாளர்களை சட்டத்தின் கீழ் சமமாக ஆக்குவதற்கான சீர்திருத்த நடவடிக்கைகளை அரசாங்கம் அறிமுகப்படுத்திய பிறகு, குக்கிகள் தாங்களாகவே அனுபவித்து வந்த அதே உரிமைகளை பெரும்பாலும் இந்து மைதேயி குழுவிற்கு வழங்குவது என்று அஞ்சினர்.

பெருமளவில் கிறிஸ்தவ குக்கி பழங்குடியினருக்குள் உள்ள சில ஆர்வலர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வீதிகளில் இறங்கினர். அச்சுறுத்தல். ஜோர்டானின் 1970 கறுப்பு செப்டம்பர் ஒடுக்குமுறையிலிருந்து தப்பியோடிய பாலஸ்தீனிய அகதிகளின் வருகை லெபனானில் அமைதியின்மை வருவதை அறிந்ததே.

மியான்மாரின் இராணுவ ஒடுக்குமுறையிலிருந்து தப்பிக்கும் குக்கி அகதிகளின் வருகையும் நெருப்பிற்கு எரிபொருளைச் சேர்த்தது.

அபின் சாகுபடிக்கு எதிரான இந்தியாவின் ஒடுக்குமுறையானது சரியான புயலைச் சேர்த்தது. பர்மாவை விட்டு வெளியேறிய பல குக்கிகள் இந்திய எல்லையில் அபின் சாகுபடியை மீண்டும் தொடங்கினர்.

மேலும் பல கிறிஸ்தவர்கள் வர்த்தகத்தில் இருந்து நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பயனடைந்த நிலையில் உள்ளூர் கிறிஸ்தவர்கள் வருத்தம் அடைந்திருக்கலாம்.

அபின் சாகுபடிக்கு எதிரான இந்தியாவின் ஒடுக்குமுறையானது சரியான புயலைச் சேர்த்தது. பர்மாவை விட்டு வெளியேறிய பல குக்கிகள் இந்திய எல்லையில் அபின் சாகுபடியை மீண்டும் தொடங்கினர்.

மேலும் பல கிறிஸ்தவர்கள் வர்த்தகத்தில் இருந்து நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பயனடைந்த நிலையில் உள்ளூர் கிறிஸ்தவர்கள் வருத்தம் அடைந்திருக்கலாம்.

ஆனால் போதைப்பொருள் சாகுபடி மற்றும் ஹெராயின் வர்த்தகத்தை நிறுத்துவதற்கு மணிப்பூரில் கிறித்தவ விரோதமாக இல்லை, அதைவிட ஓபியம் ஒழிப்பு முயற்சிகள் ஆப்கானிஸ்தானில் ''இஸ்லாமிய வெறுப்பாக'' இருந்தன.

இவை எதுவும் அடுத்தடுத்த வன்முறைகளை நியாயப்படுத்தவில்லை. சில குக்கியும் மெய்டேயும் ஒருவருக்கொருவர் வீடுகளையும் வணிகங்களையும் எரித்தனர்.

குக்கிகள் மசூதிகளை எரித்தனர், அதே நேரத்தில் மெய்டெய் கலகக்காரர்கள் தேவாலயங்களை குறிவைத்து சில குக்கிப் பெண்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட துஷ்பிரயோகம் மன்னிக்க முடியாதது. குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்த வழக்கறிஞர்கள் முயல்வதால், இந்திய உச்ச நீதிமன்றம் அதன் விளைவாக வரும் கிரிமினல் வழக்கை கண்காணிப்பது சரியானது.

குற்றங்கள் மன்னிக்க முடியாதவை என்றாலும், அவை நிகழ்ந்த சூழலையும் புரிந்து கொள்வது முக்கியம் (மன்னிக்கவில்லை என்றாலும்) பெரும்பாலும் கிறிஸ்துவ இனக்குழு? பிரச்சனை மதம் அல்ல என்பதை இது காட்டுகிறது.

அரசியல் விவாதத்தின் போது மோடியின் கொள்கைகளை விமர்சிப்பது நியாயமானது. எவ்வாறாயினும், கிறித்தவத்தைப் பற்றிய இந்தியாவின் நிலைப்பாட்டை விமர்சிப்பவர்கள் இப்போது அமர்ந்திருக்கும் நாடுகளை விட நடைமுறையில் கிறிஸ்தவர்களைப் பாதுகாக்க இன்னும் அதிகமாகச் செய்யும் ஒரு நாட்டை அவதூறாகப் பேசுவது நியாயமில்லை என்றே கூற வேண்டும்....

## பொறுப்புக்கூறல் விடயத்தை குற்றவியல்...

மேற்குலக நாடுகளைப் பொறுத்தமட்டில் மனித உரிமைகள் என்பது வெறுமனே பேரம் பேசுவதற்கான கருவி மாத்திரமே என்பதையே இஸ்ரேல் - பலஸ்தீன விவகாரத்தில் மேற்குலக நாடுகளின் செயற்பாடுகள் தெளிவாக உணர்த்துகின்றன.

எனவே பொறுப்புக்கூறல் விடயத்தை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்குள் மாத்திரம் மட்டுப்படுத்துவதன் மூலம் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு எவ்வித தீர்வும் கிட்டாது. மாறாக இவ்விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்வதன் மூலமே பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தமுடியும் என்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் அமைப்பினால் கடந்த 7 ஆம் திகதி தென் இஸ்ரேலில் நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து தீவிரமடைந்துள்ள இஸ்ரேல் - ஹமாஸ் மோதலின் நீட்சியாக கடந்த சில வாரங்களாக காஸாவில் இஸ்ரேலிய படையினர் நடத்தி வரும் தாக்குதல்களால் சிறுவர்கள் உட்பட பெருமளவானோர் உயிரிழந்துள்ளனர்.

இருப்பினும் தற்போதுவரை அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி போன்ற மேற்குலக நாடுகள் இஸ்ரேலுக்கு ஆதரவளித்துவருவதுடன் இம்மோதலை நிறுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபை முன்னெடுத்துவரும் முயற்சிகள் போதுமானவையன்று என்ற விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டுவருகின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில் தற்போது காஸாவில் பதிவாகிவரும் படுகொலைகளையும், இலங்கையில் கடந்த 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்ற படுகொலைகளையும் ஒப்பிட்டு பல்வேறு தரப்பினரும் கருத்து வெளியிட்டுவருகின்றனர்.

அந்தவகையில் இதுபற்றிக் கருத்துவெளியிட்ட தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மேற்குலக நாடுகளைப் பொறுத்தமட்டில் மனித உரிமைகள் என்பது வெறுமனே பேரம்பேசுவதற்கான கருவி மாத்திரமே என்பதையே இஸ்ரேல் - பலஸ்தீன விவகாரத்தில் மேற்குலக நாடுகளின் செயற்பாடுகள் தெளிவாக உணர்த்துவதாகத் தெரிவித்தார். இவ்வாறானதொரு சூழ்நிலையில் இலங்கை விவகாரத்தைப் பொறுத்தமட்டில் மேற்குலக நாடுகளின் நகர்வுகளுக்கு ஏற்ப நாமும் காய்களை நகர்த்தவேண்டுமே தவிர, வெறுமனே அவர்கள் கூறுவதை மாத்திரம் செய்பவர்களாகவோ, அவதானிப்பாளர்களாகவோ இருக்கக்கூடாது எனவும் அவர் அவர் வலியுறுத்தினார்.

அதுமாத்திரமன்றி 'ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அனைத்து அமர்வுகளிலும் பலஸ்தீன விவகாரம் குறித்துப் பேசப்படுகின்ற போதிலும், அதனால் என்ன பயன் அடையப்பட்டிருக்கின்றது?' எனக் கேள்வி எழுப்பிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரம் ஆராயப்படுவதும் இதனை ஒத்தது தான் என்று குறிப்பிட்டார்.

'இலங்கை மீதான சீனாவின் ஆதிக்கம் எக்காலத்திலும் நீங்கப்போவதில்லை. எனவே இலங்கை விவகாரத்தை சர்வதேச அரங்கில் பேசுபொருளாக வைத்திருக்கவேண்டிய தேவை மேற்குலக நாடுகளுக்கு உண்டு. அதன்மூலம் எதிர்காலத்தில் சீனசார்பு அரசாங்கமொன்று ஆட்சிபீடமேறினால், அதன்மீது அழுத்தம் பிரயோகிப்பதற்கு இவ்விவகாரத்தைப் பயன்படுத்தமுடியும். எனவே பொறுப்புக்கூறல் விடயத்தை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்குள் மாத்திரம் மட்டுப்படுத்துவதன் மூலம் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு எவ்வித தீர்வும் கிட்டாது' என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறானதொரு பின்னணியில் ஐக்கிய நாடுகள் சபையின் ஊடாக பொறுப்புக்கூறல் மற்றும் நீதியை நாடுவதாக இருந்தால், இவ்விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்வதன் ஊடாக மாத்திரமே அதனை அடைந்துகொள்ளமுடியும் என்று அவர் தெரிவித்தார்.

## தமிழர்களை வெட்டுவேன் பௌத்த தேரர் கூச்சல்....

அனைத்து தமிழர்களையும் வெட்டுவேன், என்ன செய்கிறார்கள் என பார்ப்போம் என்று மட்டக்களப்பு மங்களாராமய விகாரையின் விகாராதிபதி அம்பிட்டியே சுமனரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட இருதயபுரம் பகுதிக்கு இன்று மாலை சென்ற அம்பிட்டிய சுமனரத்ன தேரர், தமிழர்கள் மற்றும் தமிழ் அரசியல்வாதிகள் உள்ளிட்டோரை எச்சரிக்கும் வகையில் கடும் தொனியில் கத்தி கூச்சலிட்டதன் காரணமாக அப்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இருதயபுரம் கிழக்கு பகுதியில் உள்ள சிங்கள மயானத்தில் வீடு உடைத்த கழிவுப்பொருட்கள் போடப்பட்டுள்ள நிலையில் அங்குவந்த அம்பிட்டிய சுமனரத்ன தேரர் அதற்கு எதிராக கடுமையான வார்த்தைப்பிரயோகங்களை கொண்டு பேசினார்.

இதன்போது அப்பகுதிக்கு வந்த பொலிஸார் அவரை சமாதானப்படுத்தி அங்கிருந்து செல்வதற்கான ஏற்பாடுகளை செய்தனர்.

எனினும், அம்பிட்டியே சுமன ரத்ன தேரர் கத்தி கூச்சலிட்டார்.

இதன்போது பொலிஸார் இந்த வீதியை மூடினார்கள், பிரச்சினை ஏற்படுத்தினார்கள், இறுதியில் எமக்கு எதிராகவே வழக்குத் தாக்கல் செய்தனர். இவர்களின் இந்த செயற்பாடு சரியானதா.

இவ்வாறு செய்ய வேண்டாம். நாம் உதவியற்றவர்கள். இனம் என்ற ரீதியில், இங்கு இடம்பெறும் குற்றங்களைத் தடுக்க வேண்டும்.

நாட்டில் இனவாதம் இல்லை, மதவாதமும் இல்லை. இந்த நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் நல்லிணக்கத்துடன் மிகவும் அமைதியாக வாழ்கின்றனர். சாணக்கியன் மற்றும் இங்குள்ள அதிகாரிகள் மேற்கொள்ளும் கீழ்த்தரமான நடவடிக்கைகளால் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படும். அவ்வாறு யுத்தம் ஏற்படுவதை தடுக்க முடியாது என்று அம்பிட்டிய தேரர் கடும் தொனியில் கத்திய கூச்சலிட்டமை அந்தப் பகுதியில் பதற்றமான நிலையை தோற்றுவித்திருந்தது.

குறித்த பகுதியில் இரண்டு தினங்களுக்கு முன்பாக குறித்த கட்டிட இடிபாடுகள் கொட்டப்பட்ட நிலையில் அவற்றினை அங்கிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கையினை எடுப்பதாக மாநகரசபை ஆணையாளர் சுமனரத்ன தேரரிடம் நேற்று தெரிவித்திருந்தாகவும் எனினும் அவர் இன்று அங்கு சென்று இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டதாகவும் மாநகர ஆணையாளர் தெரிவித்தார்.

குறித்த கட்டிட இடிபாடுகளை அகற்றி அப்பகுதியை தூய்மைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும் இரண்டு முச்சக்கர வண்டிகளில் வந்த அம்பிட்டிய சுமனரத்ன தேரரும் அவருடைய சகாக்களும் அங்கிருந்தவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் கருத்துகளை தெரிவித்ததுடன் இனமுரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையிலும் கருத்துக்களை தெரிவித்திருந்தனர்.

## வடக்கின் மீன் பிடித்துறையில் கைவைக்கும் சீனா...

வட மாகாணத்தின் மீன்பிடித்துறையில் சீனாவின் பிரசன்னம் அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுவரும் பின்புலத்தில வடக்கு மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்ய 1500 மில்லியன் ரூபா நிதியை சீனா வழங்கியுள்ளது.

வடக்கில் சீனா கால்பதிப்பதில் இந்தியா கவலை கொண்டுள்ள போதிலும், இந்த விடயத்தில் சீனாவின் முயற்சி தொடர்கிறது.

வடக்கு, கிழக்கில் சீனாவின் பிரசன்னம் அதிகரித்துவருவது தொடர்பில் இலங்கை அதிகாரிகளிடம் இந்தியா தமது ஆட்சேபனையை பதிவுசெய்துள்ள போதிலும், இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில், குறிப்பாக மீன்பிடித்துறையை மையமாகக் கொண்டு சீனாவின் தலையீடுகள் அதிகரித்துள்ளன.

சீனத் தூதுவர் கி லென்ஹோங் (கிடி நூடனுண டணிணஜ்) 2021இல் வடக்கு மாகாணத்திற்குச் சென்றமை மற்றும் அங்கு மேற்கொண்டிருந்த செயல்பாடுகள் தொடர்பில், இந்தியா கவலையை வெளிப்படுத்தியிருந்தது.

சீன தூதுவர் மற்றும் குழுவினர் நல்லூர் கந்தசுவாமி கோவிலில் வழிபாடு நடத்தியதுடன், உள்ளூர் இந்து பாரம்பரியத்தை பின்பற்றி வேஷ்டி அணிந்து வெறும் மார்போடு நல்லூரில் வழிபட்டனர்.

யாழ்ப்பாண மக்களின் பண்பாட்டு நெறிமுறைகளை ஈர்க்கும் முயற்சியாகவே சீன குழுவினர் இவ்வாறு செயல்பட்டிருந்தனர்.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இந்தியா சிறப்பு நலன்களைக் கொண்டுள்ளது. இந்தியாவின் நெருங்கிய கடல்சார் அண்டை நாடான இலங்கை, அதனுடன் நெருங்கிய உறவைக் கொண்டிருக்க வேண்டும் என்பது இந்தியாவின் நிலைப்பாடு.

ஆனால், இந்தியாவின் எதிர்ப்பை கண்டு சீனா பின்வாங்க தயாராக இல்லை. இந்த இரண்டு மாகாணங்களின் மீன்பிடித் துறையில் மேலும் முதலீடு செய்ய சீனா ஆர்வங்காட்டி வருகிறது.

அண்மையில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சீனாவிற்கு விஜயம் செய்திருந்த போது, பெல்ட் அண்ட் ரோட் திட்டத்தின் பத்தாம் ஆண்டு நிறைவைக் கருத்தில் கொண்டு, வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ள மீன்பிடித் துறையினரின் நலனுக்காக சீனா ரூ.1500 மில்லியனை வழங்குவதாக உறுதியளித்துள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இதில் ரூ.500 மில்லியனை மீனவர்களின் வீட்டு வசதிக்காகவும் மேலும் ரூ.500 மில்லியனை வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களை பெற்றுக்கொடுக்கவும் பயன்படுத்த உள்ளதாக கூறியுள்ளார்.

மீதம் உள்ள ரூ.500 மில்லியனை மீனவ குடும்பங்களுக்கு உலர் உணவுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைவதால் வடக்கில் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.


இது நீண்டகாலப் பிரச்சினையாக உள்ளது. அதைத் தீர்க்க இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளின் அரசாங்கங்கள் மேற்கொண்ட முயற்சிகள் தோல்விகண்டுள்ளன. மீன்பிடி நடவடிக்கைகளில் அதிகரித்த சீனப் பிரசன்னம் நிச்சயமாக இந்தியாவின் கவலைகளை மேலும் அதிகரிக்கும். ஆனால், இலங்கை சீனாவின் உதவிகளை எப்போதும் நிராகரிப்பதற்கான வாய்ப்புகள் குறைவாகும்.

இந்நிலையில், வடக்கில் உள்ள மீனவ சமூகத்தின் துன்பங்களைப் போக்க அமைச்சர் டக்ளஸ் இந்த உதவிகளை நிச்சயமாக பயன்படுத்துவார். காரணம் அவரது வாக்கு வங்கி அதிகமாக மீனவ சமூகத்தை சார்ந்தே உள்ளது.

இதனால் கடற்றொழில் துறையின் அபிவிருத்தியில் எவருடைய உதவியையும் ஏற்றுக் கொள்ள வேண்டிய அரசியல் நிர்ப்பந்தத்தில் அமைச்சர் டக்ளஸ் உள்ளார்.

# பல்கலைக்கழகமாக மாறும் யாழ். ஜனாதிபதி மாளிகை







## கல்விக்கு முன்னுரிமை வழங்கும் Northern uni

Northern Uni ஆகிய நாங்கள் பெருமையுடன் தெரிவிப்பது என்னவென்றால் வடக்கு கிழக்கின் கல்வித்துறை மற்றும் தொழில் வாய்ப்பு மேம்பாட்டில் புதிய அத்தியாயத்தினை ஏற்படுத்தும் நோக்கோடு எமது பல்கலைக்கழகத்தை விரிவாக்குவதுடன் தொழில்நுட்ப பூங்கா ஒன்றினையும் அமைப்பதற்காக ஜனாதிபதி மாளிகையை பெற்றுக் கொண்டுள்ளோம்.

Northern Uni ஆனது மானிப்பாயை பூர்வீகமாகக் கொண்ட மற்றும் கனடா வாழ் தமிழ் முதலீட்டாளர் திரு.இந்திரகுமார் பத்மநாதன் அவர்களின் பூரணமான நிதி முதலீட்டில் வடக்கு கிழக்கு மாணவர்களுக்கு சிறந்த உயர்தரத்திலான கல்வி வாய்ப்பினை வழங்குவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. Northern Uni இன் கல்வி பங்காளர்களாக Sri Lanka Institute of Information Technology (SLIIT) University of Bedfordshire (UK), University of Curtin (Australia) மற்றும் University College of Renison -affiliated with the University of Waterloo (Canada) என்பன விளங்குவதுடன் சர்வதேச ரீதியில் பிரபல்யமான மேலும் பல பல்கலைக்கழகங்களும் எங்களுடன் இணைய இருக்கின்றன.

இலங்கையில் வருடா வருடம் நடைபெறும் க.பொ.த உயர்தர பரீட்சையின்போது சுமார் 22600 மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு தகுதி பெறுகிறார்கள். இருப்பினும் 4379 பேர் மட்டுமே பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகிறார்கள். 18289 மாணவர்கள் தகுதி பெற்றும் அவர்களுக்கான பல்கலைக்கழக வாய்ப்பு கிடைக்காத நிலை காணப்படுகிறது. இந்நிலையினை சரி செய்யும் நோக்கிலேயே NorthernUni ஆனது உருவாக்கப்பட்டதுடன் இதற்கான ஆதரவும் வரவேற்பும் எமக்கு கிட்டியது அளப்பெரிய விடயமாகும்.

இதுவரை காலமும் வடக்கு மற்றும் கிழக்கு மாணவர்கள் தொழில்நுட்ப கற்கையினை கொழும்பு சென்று கற்க வேண்டிய நிலை காணப்பட்டது. தற்போது நான்கு வருட தொழில்நுட்ப கற்கையினை யாழ்ப்பாணத்திலேயே மேற்கொள்ள கூடிய வசதி வாய்ப்புகளுடன் கந்தர்மடம் பகுதியில் எமது CITY CAMPUS ஐ நிறுவியுள்ளோம். எமது பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கு கல்விக்கான புலமைப்பரிசில்களும் உயர்தரத்தில் அதியுயர் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு இலவச கற்கையும் அதனோடு மாதாந்த கொடுப்பனவு வசதிகளும் வழங்க உள்ளோம். மேலும் Yarl Education Support Fund (YES) ஊடாக குறைந்த மற்றும் வருமானமற்ற குடும்ப பின்னணியில் உள்ள மாணவர்களுக்கு வட்டியில்லா கடன் மூலம் அவர்களின் உயர்கல்வியை எம்மிடம் கற்பதற்கான வாய்ப்பினையும் வழங்கவுள்ளோம்.

எமது CITY CAMPUS ஆனது 2000 மாணவர்கள் கல்வி கற்க மட்டுமே போதுமான வசதியினைக் கொண்டிருப்பதால் அதனை விஸ்தரித்து 10000 மாணவர்கள் கல்விகற்க கூடிய உயர்ந்த தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகளுடனான பல்கலைக்கழகத்தையும் 25000 பேருக்கு வேலை வாய்ப்புக்கு வசதியளிக்கும் முகமாக தொழில்நுட்ப பூங்காவையும் நிறுவுவதற்கான நிலப்பரப்பை பல்வேறு வகையில் ஆராய்ந்த போது UDA மூலம் முன்னாள் ஜனாதிபதியால் அரச காணிகளையும் சில தனியார் காணிகளையும் இணைத்து அதியுயர் வசதிகளுடன் காங்கேசன்துறையில் அமைக்கப்பட்டிருந்த ஜனாதிபதி மாளிகை பலகாலமாக பயன்படுத்தப்படாது காணப்படுவதாகவும் இந் நிலப்பரப்பினை வழங்குமாறு இருவேறு தரப்பினர் அணுகியுள்ளதாகவும் தகவல் அறிந்துகொண்டோம். இதன் பிரகாரம் இம் மாளிகையை தன்வசமாக்க முயற்சித்தவர்களில் கனடாவை சேர்ந்த வர்த்தகர்கள் ஹோட்டல் மற்றும் கசினோ அமைப்பதற்காகவும்; இந்திய காவல்துறை தமது பயிற்சி பட்டறையினை நடத்தும் தளமாக்குவதற்காகவும் UDA இடம் கோரியிருந்தனர்.

NorthernUni நிறுவுனர் திரு. இந்திரகுமார் பத்மநாதன் அவர்கள் கண்டியில் கௌரவ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்திருந்தார். இதன்போது எமது நோக்கத்தையும் அதனால் எம்மக்களின் வாழ்வாதாரத்தில் ஏற்படவிருக்கும் விருத்தி குறித்த தார்ப்பரியத்தையும் எடுத்தியம்பிய போது கௌரவ ஜனாதிபதி கல்வி முயற்சிக்கு இவ் நிலப்பரப்பை வழங்குவதற்கு ஒப்புக்கொண்டார். அதனடிப்படையில் துரிதமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு ஒக்டோபர் மாதம் 16ம் திகதி UDA தவிசாளர் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

ஜனாதிபதி மாளிகை அமைந்திருக்கும் நிலப்பரப்பளவில் தனியார் காணிகள் சில அமைந்திருக்கிறது என்பதனை நாம் நன்கு அறிவோம். அதன்படி தனியார் காணிகளை நாம் சுவீகரிப்பதாக எண்ணின் அதற்கான இழப்பீடு செலுத்துவதற்கும் தயாராக உள்ளோம். அந்தவகையில் இந்த எல்லைப்பரப்பிற்குள் அமைந்த காணிகளின் உரிமையாளர்கள் தகுந்த ஆதாரங்களை சமர்ப்பித்து உறுதிப்படுத்தும் பட்சத்தில் ஈடு செய்வதற்கு தீர்மானித்துள்ளோம். இது தொடர்பான விபரங்களுக்கு 0777315262 எனும் இலக்கத்தை தொடர்பு கொள்ளலாம். தமிழ் மக்களின் பிரதேசத்தில் அமைந்த தமிழர்களின் காணிகளில் கல்வி விருத்தி பணிகளுக்கான நடவடிக்கைகள் அன்றி வேறெந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் நோக்கம் எமக்கில்லை. மேலும் குறித்த பிரதேசத்தில் காணப்படும் ஆலயங்களினை பராமரிப்பதிலும் வழிபாடுகள் மேற்கொள்வதிலும் பொதுமக்களுக்கு உறுதுணையாக இருப்போம். நீர் உயர நெல்லுயரும் என்பதற்குகிணங்க மாணவர் கல்விக்கு வித்திடும் இப்பணி தமிழர் சமுதாயத்தை உயர்த்தும் என்பதில் ஐயமில்லை.








தமிழ் பேசும் மக்களின் தேசியப் பத்திரிகை!


இப்பத்திரிகை 27.10.2023 அன்று அகரவ் பப்ளிசிங் & மீடியா பிறின்டிங் ஹவுஸ் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, வெளியிடப்படுகிறது.